97430

C

Q23:38·
N34

ஸ்ரீ

ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மன் துணை.

ஸ்ரீ ஹநுமத் ஸஹாயம்.

---

# ஸ்ரீ கடிகாசல (சோளசிங்கபுர) ஸ்தலபுராணம்.

ௐ

OFFICE OF THE ...
17 MAY 193?
MADRAS

P. ஹனுமந்தராவ் அவர்களால்

இயற்றப்பட்டது.

ௐ

O25 38.2113
N34

[All Rights Reserved.]

Price 0—6—0.] 1934 [விலை 0—6—0.

624
294.535

PRINTED AT THE
HINDI PRACHAR PRESS,
TRIPLICANE.

N34
Q23 : 38 .
97430

## தியானம்

i. ஆடி யாடி அகம் கரைந்து, இசை
பாடிப் பாடிக் கண்ணீர்மல்கி, எங்கும்
நாடி நாடி நரசிங்கா ! என்று
வாடி வாடும் இவ் வாணுதலே.

ii. உன்னைச் சிந்தைசெய்து உன் நெடுமாமொழி
இசை பாடியாடி என்
முன்னைத் தீவினைகள் முழுவே ரரிந்தனன் யான்
உன்னைச் சிந்தையினுலிகழ்ந்த இரணியனகல் மார்வங்
கீண்ட என்
முன்னைக் கோளரியே ! முடியாத தென் எனக்கே ?

iii. எக்காலத் தெந்தையாய் என்னுள் மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேதவிமலர் விழுங்கும் என்
அக்காரக் கனியே உன்னை யானே
(நம்மாழ்வார்)

iv. மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே.
(திருமங்கையாழ்வார்)

---

இப்பாசுரங்களைப் பாடி இப்புத்தகத்தைப் பூசித்தால் காரிய சித்தியாகும்.

# முகவுரை

மனக்கலக்கத்தைத் தவிர்த்துக் குறைவை நிறைவாக்கிப் பக்தகோடிகளைப் பரிபாலிக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய கடிகாசலத்தின் ஸ்தலமகாத்மியத்தை இக்காலத்தில் கண்ணால் காணவும் முடியாது போனமைபற்றி பலர் ஊக்கியதன் காரணமாக இதை எழுதத் துணிந்தேன்.

இதற்குச் சம்மந்தப்பட்ட பல தமிழ் தெலுங்கு புஸ்தகங்கள் கிடைத்தனவெனினும் அவை ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டதோடு ஆதி நூலுக்கும் பேதப்பட்டமையால் முழுதும் முதனூலின் உதவியைக் கொண்டே, அதிலுள்ள இருபத்திரண்டு அத்தியாய விஷயங்களையும் சிறு சிறு பாகங்களாய்ப் பிரித்துச் சுருக்கமாகவும், அநாவசியமான எதையும் சேர்க்காமலும் வாசகர்களுக்கு எளிதில் புரியும்படி கூடியவரையில் கவனித்து இது எழுதப்பட்டிருக்கிறது. சம்ஸ்கிருதத்தை மொழிபெயர்க்கும் விஷயத்தில் பேருதவி புரிந்த காமாக்ஷிபுரம் புராணிகர் திரு. சுவாமிநாதசாஸ்திரிகளுக்கும், காவேரிப்பாக்கம் ராமசுவாமி அய்யரவர்களுக்கும், ராஜகோபால்ராவ் B.A. (Retired Sub-Registrar) அவர்களுக்கும் நன்றிகள் பல.

இதன் முதனூலான பிர்மகைவர்த்த புராணத்திலுள்ள கடிகாசலமகாத்மியத்தில் உள்ள அத்தியாயங்கள் இருபத்திரண்டு. அவற்றுள், இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள சுமார் முப்பதுக்குட்பட்ட தீர்த்தங்களே காணப்படுகின்றன.

ஆனால் சிலர் நூற்றெட்டு தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டும், ஆதாரமின்றி அச்சிட்டு வெளிப்படுத்தியும் இருக்கிறார்கள். அவைகளைப் பற்றிய முழுவிவரங்களைத் தக்கப் பிரமாணங்களுடன் தெரிவிப்பார்க்கு நன்றிசெலுத்தி அவைகளையும் தொடர்ச்சியாக வெளியிடலாகுமென்று நம்புகிறேன்.

P. ஹனுமந்தராவ்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 7 | ப்டுபவனும் | படுபவனும் |
| ,, | 8 | ராத்மயை | ராத்மனாய் |
| ,, | 17 | திருந்தனையாயிலும் | திருந்தனையாயினும் |
| 7 | 16 | அந்தத்தவத்தையும் | அந்தத்தலத்தையும் |
| 10 | 4 | பணிவாம் | பணை வாய் |
| ,, | 9 | கல்வி | கலவி |
| 13 | 23 | வனக்கொதிப்பு | மனக்கொதிப்பு |
| 14 | 2 | க்ஷத்திர | க்ஷத்திரிய |
| 15 | 21 | இருண்டவர்களாய்க் | இருண்டவர்களாய் |
| 17 | 1 | மாக்கிய | மாக்கி |
| 18 | 3 | மனம் | மனமும் |
| ,, | ,, | பாணம் | பானம் |
| 19 | 3 | வேண்டுமென்பதை | வேண்டு மென்பதே |
| 20 | 9 | அந்தக் | அந்தச் |
| 21 | 9 | காட்டின ? | காட்டின. |
| ,, | ,, | அவர்களேடு | அவர்களோடு |
| 23 | 20 | கோவில் | கோவிலில் |
| 29 | 7 | தீர்க்கமுடியாது | தீர்க்கமுடியாதது |
| 40 | 5 | அம்சத் | அம்சங் |
| 42 | 13 | குறிக்கிட்ட | குறுக்கிட்ட |
| 43 | 13 | பிறசித்தி | பிரசித்தி |
| 45 | 27 | என்றும் | என்னும் |
| 47 | 1 | காஜித்து | கர்ஜித்து |

# அடக்கம்.


| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| மானுல் மதி தெளிந்த மன்னன் | ... | ... | 1 |
| ஸ்ரீ பரமசிவ தரிசனம் | ... | ... | 5 |
| அகதிக்குத் தெய்வமே துணை | ... | ... | 9 |
| ஸுவரதன் ; அநுவரதன் | ... | ... | 10 |
| இந்திரத்யும்நனும் இந்திரனும் | ... | ... | 12 |
| உம்பரை வாட்டிய கும்போதரன் | ... | ... | 14 |
| ஆஞ்சநேயர் சங்கு சக்கரம் பெற்றது | ... | ... | 18 |
| மகுடம் பூண்ட மகபதி | ... | ... | 22 |
| கிரிப் பிரதக்ஷிணம் | ... | ... | 24 |
| பிரம தீர்த்தம் | ... | ... | 25 |
| பைரவ தீர்த்தம் | ... | ... | 27 |
| அலாவர்த்த தீர்த்தம் | ... | ... | 28 |
| கௌதம தீர்த்தம் | ... | ... | 29 |
| வாமதேவன் அமிர்தம் பெற்றது | ... | ... | 29 |
| அகஸ்திய தீர்த்தம் | ... | ... | 31 |
| அனும தீர்த்தம் | ... | ... | 32 |
| பாண்டவ தீர்த்தம் | ... | ... | 33 |
| சந்திர தீர்த்தம் | ... | ... | 34 |
| பத்ம ஸரோவரம் | ... | ... | 35 |
| வால்மீக தீர்த்தம், ராம தீர்த்தம் | ... | ... | 36 |
| வஜ்ஜிர தீர்த்தம் | ... | ... | 37 |
| கல்ஹாரம் ; சிந்தாமணி மலை | ... | ... | 40 |

| | |
|---|---|
| தீர்க்க ஸரோவரம் ... ... | 41 |
| வராக தீர்த்தம் ... ... | 42 |
| புண்டரீக (வியாக்ர) தீர்த்தம் ... ... | 44 |
| கருட தீர்த்தம் ; பாப நாசனம் தீர்த்தம் ... | 46 |
| அமிர்த தீர்த்தம், வாம, ரத்ந தீர்த்தங்கள் ... | 48 |
| வசிட்ட தீர்த்தம் ... ... | 49 |
| ஆஞ்சநேயர் தோத்திரம் ... ... | 51 |
| விசுவாமித்திரர் ... ... | 53 |
| திருமணம், லக்ஷ்மீ தீர்த்தம் ... ... | 56 |
| லக்ஷ்மி ஸ்துதி ... ... | 58 |
| நரசிம்ம தீர்த்தம் ... ... | 59 |
| சங்க சக்கர தீர்த்தங்கள் ... ... | 62 |
| அம்ஸக்கோடி ... ... | 64 |
| ஹேமகோடி விமானம் ... ... | 65 |
| ஸ்ரீ நரசிம்மர் ஸ்துதி ... ... | 65 |
| மங்களகரம் ... ... | 66 |
| புராண சிரவண பலன் ... ... | 67 |
| ஸ்ரீ நரசிம்மர் அவதாரகாலம் ... ... | 67 |


ஸ்ரீ

# கடிகாசல (சோளசிங்கபுர) ஸ்தல புராணம்.

## மாலால் மதி தெளிந்த மன்னன்

சுப குண விசேஷங்கள் நிறைந்த புண்ணிய தீர்த்த க்ஷேத்திரங்களின் மகத்துவங்களைக் கேட்க ஆவலுற்ற ரிஷிகள் பிரமதேவனைப்பார்த்து "வாணீ நாயகா! வேங்கடாத்ரி மகாத்மியம் முன்பு தம்மால் கேட்கப் பெற்றோம்; அதில் 'இந்திரத்யும்நன்' என்னும் அரசனுடைய விருத்தாந்தம் கொஞ்சம் மட்டுமே அறியலானோம். இப்போது அவ்விராஜ ரிஷி எவ்வாறு—எத்தேவனை ஆராதித்தமையால் பிராமணத் துவமும், விஷ்ணு பதமும் அடைந்தாரென்பதை விவரிக்க வேண்டுமாய்த் தேவரீரைப் பிரார்த்திக்கிறோம்" என்றனர். நான்முகன் அவ்வேண்டு கோளுக்கிணங்கிப் பின்வருமாறு சொல்லலானார்:—

திரேதா யுகத்திலே, வட மதுரையில் இந்திரத்யும்நன் என்பான் மன்னர் மன்னனாய் நீதி வழுவாமல் அரசு புரிந்து வந்தான். அவன் மனைவி தன் நாயகன் குணத்திற்கும் மனத்திற்கும் ஒத்தவளாய்க் கொழுநனை தெய்வமெனக் கொண்டு கணப் போதும் அவன் பிரிவை ஆற்றாதவளாய்க்

கற்பினுக்கு அரசியென ஒழுகி வந்தாள். இவ்வரசனுக்குப் பூர்வ புண்ணிய வசத்தினுல் புஜங்களில் சங்கு சக்கரம் பொறிக்கப் பட்டிருந்தது மன்றி, எளிதில் கிடைக்கமுடியாத விஷ்ணு பக்தியும் இவன் வசப்பட்டிருந்தது. மேலும் 'புத்' என்னும் நரகத்தினின்றும் கரையேற்ற வல்ல சற்குண குமாரனும் இவனுக் குண்டு. ஆகவே இந்திரத்யும்நனுடைய அதிர்ஷ்டத்துக்கு உவமையே கூற முடியாமலிருந்தது.

இந்த முடி மன்னன் ஓர் நாள் வேட்டையாட எண்ணி நால் வகைப் படையுடன் வில்லியரும் வேட்டை நாய்களும் புடை சூழ 'வாயு ஜங்கம்' என்னும் குதிரையின்மேல் ஆரோகணித்துக் காட்டில் நுழைந்தான். இவன் சிரத்தில் நவமணி மயமான மகுடமும், புஜக்கிரீடைகளும், மார்க் கவசமும் அணிந்திருந்தான்; அன்னவன் இடையில் உடைவாளும், கரத்தில் வில்லம்பும் மின்னின.

கானகத்தில் கொஞ்ச தூரம் சென்றவுடனே இந்திரத்யும்நன், புரவியைச் சட்டென நிறுத்தி, தன்னைத் தொடர்ந்து அணியணியாய் வரும் சேனைகளையும் வில்வல்லோரையும் பார்த்து வேட்டையாடி விலங்குகளை யழிக்கும்படிக் கட்டளையிட்டான். அதே விநாடியில் வில்லும் அம்பும் ஏந்தி யாவரும் நாலா பக்கங்களிலும் காற்றினும் கடுகிப் பாய்ந்து சென்றனர். அரசனும் ஓர் புறமாகத் தன் குதிரையைத் தட்டிச் செலுத்தித் தனுசை நாணேற்றிக் குணத்வனி செய்தான். சிங்கத்தின் கர்ஜனையைப் போன்ற அப்பேரொலியைக் கேட்ட மிருகங்கள் யாவும் கதி கலங்கி, தம் இருப்பிடங்களை விட்டுத் தாறுமாறாய் ஓடத் தலைப்பட்டன.

மன்னன் மனங் கூசாமல் பல விலங்குகளைக் கொன்று கடைசியாகத் தன் கண்ணில் பட்ட பெண் மான் ஒன்றைத்



துரத்திச் சென்றான். சிறிது தூரம் ஓடியதும், காற்றைப் போன்ற குதிரையின் வேகத்தின் முன் தான் தப்ப முடியாதென்று உணர்ந்த அந்த மான் சட்டென அரசன் முகமாய்த் திரும்பி நின்று, அவனை வணங்குவதே போல் தன் தலையைத் தாழ்த்தி உயர்த்தியது. அது விசனத்தாலும் பயத்தாலும் பீடிக்கப்படுவதாய், அதன் கண்களின் மங்கிய பிரகாசத்தாலும், அது தன் வாயிலுள்ள புல்லைத்தின்னவும் மனமற்றதாயிருந்ததாலும் அரசனுக்கு எளிதில் தெரிந்தது.

அப்போது அம்மான் ராஜனை நோக்கி "கருணையங் கடலே! மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவிக்கும் மன்னர் பிரானே! சற்றே என் மொழிகளுக்குச் செவி சாய்ப்பாய். நானே நிரபராதி. உனக்காவது உனது குடிகளுக்காவது என்னால் எவ்வித இம்சையும் உண்டானதில்லை. ஆனாலும் நீ குற்றஞ்செய்யாத என்னையும் கொல்லவே துணிந்தாய். ஆம்; அது உன் தவறல்ல. எந்த மிருகமானாலும் வேட்டையாடிக் கொல்லுதல் அரசனுக்கு நியாயமே என்று க்ஷத்திரிய தருமம் கூறுகின்றது. அவ்வாறு உன் குலத்தொழிலை நீ செய்ய முன் வந்தது சரியே. ஆயினும் எனக்காக மனமிரங்கிக்கொஞ்ச நேரம் வரையில் எனைக்கொல்ல முயலாதிருப்பாய். நான் என் கலையைக் காணமல் ஊண் உறக்கமின்றி வாடித் தேடுகையில் எனக்கு இக்கேடும் சம்பவித்தது. ஆதலால், என் கலையைத் தேடிக் கண்டதும் நானாகவே இங்கு வந்து உன் கூரிய அம்புக்கு இரையாகிறேன். தயவுசெய்து பொறுத்து அந்நேரம் வரையில் எனக்கு உயிர்ப் பிச்சை கொடு. நான் சத்தியம் தவறாமல் சீக்கிரம் இங்கு வந்து சேருவேன். சந்தேகம் வேண்டாம், என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டது."

உயிரினும் மிகுந்த அன்பைத் தன் கலையினிடம் வைத்திருந்த அப்பரிதாப மானின் பிரார்த்தனையைக் கேட்ட மன்ன

வன் மனம் மெழுகுபோல் உருகலானது. அவன் அப்பிராணியின் மேல் எல்லையிலாத இரக்கங்கொண்டான். மேலும், அது கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் பன்முறை சிந்தித்துப் பார்த்தான். அம்மொழிகளில் ஒவ்வொன்றும் அவன் இருதயத்திற் பாய்ந்துப் பதிந்து ஞான விளக்கேற்றின உடனே இந்திரத்யும்நன். "ஆ! என்ன காரியங்கள் செய்தேன்! செய்யவும் தலைப்பட்டேன்! இவ் வேழைமானைப் போன்ற எத்தனை ஆயிரப் பிராணிகளைக் கொன்றுக் குவித்திருப்பேன்?-கொல்லச் செய்திருப்பேன்? இதுவா கருணை?—நன்னெறி?—மோக்ஷமார்க்கம்? சே, ஒருபோதுமாகா! அஹிம்சையல்லவோ பரம தருமம்? கொல்லான் புலால் மறுத்தானை எல்லா உலகும் தொழுமன்றோ! ஆனால் மதி மிகுந்த மான் சொன்னபடி குலதர்மத்தாலல்லவா இத்தகைய பாதக வழிகளுக்குக் காரணம் ஏற்பட்டது! பாவமூட்டையைத் தேடிக் கொடுக்கும் தொழில்களுக்குக் கொஞ்சமும் இடந்தராத ஒழுக்கமாகிய பிராமணகுல தர்மத்தை நான் ஏன் பின்பற்றக் கூடாது? அதனால் சுலபத்தில் எனக்கு மோக்ஷமும் கிடைக்குமல்லவா? நான் அரசனே யானாலும் இப்பிறப்பிலேயே ஒழுக்கம், தவம், பக்தி இவைகளால் ஏன் பிராமணத்வம் அடைய முடியாது? முயன்றால் முடியாததும் உண்டோ? இல்லவே இல்லை. விடா முயற்சியால் தவறாமல் அந்தணக் குலமும் எந்தையின் பதமும் பெறுவேன்" என்று தனக்குள் தீர்மானித்தவனாய், எதிரில் நிற்கும் மானைக் கருணையுடன் நோக்கி "எனைப் படைத்த கடவுளாலேயே உண்டாக்கப் பட்ட புத்தி மிகுந்த மானே! உன் அமிர்தவசனங்களால் என் அகத்தின் இருள் அடியோடு அகன்றது. நான் க்ஷத்திரிய தர்மத்தை முற்றிலும் வெறுத்தேன். பிராமணத் தருமத்தையே விரும்பினேன். இனி என்னாலாவது என் பரிவாரங்களாவது உன்



போலியருக்கு எவ்வகைக் கெடுதியும் உண்டாகாது. நான் பரிசுத்தனாக வேண்டியே கடவுள் உன்னை இங்கு காட்டிக் கொடுத்தார் போலும்! நீ போய் உன் கலையைக் கண்டு சுகமாய் வாழ்ந்திரு; நான் செல்கிறேன்" என்றான் அதைக் கேட்ட மான் அடங்காத ஆனந்தத்துடன் அரசனை வணங்கிச் சென்றது.

உடனே இந்திரத்யும்நன் வேட்டையாடுதலை நிறுத்தக் கூறி அனைவருடனும் நகர் அடைந்தான். அரசனுடைய மனம் வேறுபட்டிருப்பதாயுணர்ந்த பிரஜைகளும் பணியாளரும் ஆச்சரியமும் கலவரமும் கொண்டனர். சிறிது காலத்துக்குப்பின் இந்திரத்யும்நன் இராஜ்ஜியம் என்னும் பாரத்தைத் தன் புதல்வன் மேல் சுமத்திவிட்டுப் பத்தினி சகிதம் 'ஹரித்துவாரம்' போய்ச் சேர்ந்து, மேலும் மேலும் விஷ்ணு பக்தியில் ஈடுபட்டவனாய் அவ்விடம் விட்டு 'ஜகந்நாதம்' அடைந்து அங்கே நிர்மானுஷ்யமான காடு ஒன்றில் சலனமில்லாத மனத்தனாய்த் திருமாலைக் குறித்துத் தவமியற்றத் தொடங்கினான்.

## ஸ்ரீ பரமசிவ தரிசினம்

அப்போது ஓர் நாள் இவன் கண் விழித்துப் பார்க்கையில் தானும் தன் மனைவியும் கைலாசத்தில் இருப்பதையும், எதிரில் நந்தி வாகனாரூடராய் உமாசமேத பரம சிவன் காட்சி தருவதையுங் கண்டு, பேராச்சரிய முற்றுச் சிரமேல் கரங் கூப்பிச் சிவனை வணங்கி "சடையலங்காரா! கங்காதரா! முக்கண்ணா! நீலகண்டா! பன்னகாபரணா! பொன்னார் மேனியா! புலித்தோல் பூண்டோய்! பார்வதீ பதயே! தங்கள் திருவடிகளை என் மனப்பூர்வகமாய்ப் பல கோடி தரம் வணங்கினேன்.

ஸ்ரீ சங்கரா! தேவரீரை நான் ஒரு போதும் நினையாதவனாயிற்றே! ஸ்ரீ மகா விஷ்ணுவையன்றோ நான் விரும்பித் தவம் புரிந்தேன்! அங்ஙனமிருக்க தேவரீர் தயவுக்கு அடியேன் பாத்திரனானது எவ்வாறோ? அருளவேண்டும்" என, மலைமகள் நாதன் அன்புடன் அம்மன்னவனைப் பார்த்து "இந்திரத்யும்நா! வேதங்களுக்கு அதிகாரியும், தேவ ரிஷிகளால் பூசிக்கப்படுபவனும், பிரம்ம ஸ்வரூபியும், மோக்ஷ தாயகனும், அந்தராத்மயைச் சர்வத்துள்ளும் வியாபித்தவனும், விசேஷமாக என்னுள்ளும் பிர்மாவுள்ளும் நிறைந்திருப்பவனுமான ஸ்ரீயப்பதியைக் குறித்தே நீ தவமியற்றியது உண்மையே ஆனாலும், எவன் விஷ்ணுவுக்குப் பக்தனோ, அவன் என் பிரீதிக்கும் உரியவன் ஆவன். விஷ்ணு உபாசனையால் என் அருளும் அவனுக்குத் தவறாமல் சித்திக்கும். என்னை ஸ்மரிக்கும் பக்தர்களுக்கும் நாராயணன் போக மோக்ஷமளிப்பான். வைஷ்ணவ சின்னங்கள் எனக்கும் பிரீதி யுள்ளவையே. அன்றியும் நீ தவம் புரிகையில் சதாகாலமும் 'ஹரி, ஹரி,' என்றே ஜெபித்திருந்தனையாயினும், நித்திரையால் பீடிக்கப்பட்ட ஒரு சமயம் 'ஹரி' என்பதற்குப் பதிலாக 'ஹர, ஹர, ஹர, ஹர' என்று என் நாமத்தை உச்சரித்தனை. என்னைத் துதிப்பவர்க்கு வரந்தந்து அவரது கோரிக்கைகளை ஈடேற்றுவதே என் முதற் கடனாதலின், அதன்படியே உன்னையும் உன் தர்ம பத்தினியையும் தங்கச் சிவிகையிலேற்றி இங்கு கொண்டு வரச்செய்தேன். அரசனே! உன் பக்திக்கு மெச்சினேன். நீ விரும்பும் வரம் யாது? கேள்; தருகிறேன்" என்றார்.

இந்திரத்யும்நன் பயபக்தியுடன் உமாபதியைப்பணிந்து "வைஷ்ண வோத்தமா! அடியேனுக்குப் பிராமணத்துவமும், விஷ்ணு பதமும் கிடைக்கும் வழி அருளவேண்டும்" என்றான்.



சங்கரன் "பக்தா! உன் விருப்பங்கள் நிறைவேறும்; அதற்காக நீ, எண்ணிலாத் தவசிரேஷ்டர்களும், புண்ணிய புருஷரும் சதா வாசஞ்செய்யும் 'நரசிங்கபுரம்' என்னும் நகரத்தைச் சார்ந்த 'கடிகாசல'த்தை யடைவாய்.. அந்தப் பர்வதம் கணப்போதில் பக்தரின் பாவங்களைப்போக்கி அருள் பாலிக்கும் மகிமையாலேயே 'கடிகாசலம்' என்னும் திருநாமத்துடன் விளங்குகின்றது. அதன் உச்சியில் பிரகலாத வரதனை 'ஸ்ரீ நரசிம்மன்' லக்ஷ்மீ ஸமேதராய் யோக விமானத்தில் சாந்தமூர்த்தியாய் அமிர்தக்கடைக் கண்ணோக்குடன், தம்மைச் சரணடைவோரைக் காப்பதற்காக எழுந்தருளியிருக்கிறார். திக்குப்பாலகர்களும், வியாசர் முதலான முனிகளும், சித்த கந்தர்வாதி தேவகணங்களும் பிரதி சந்தியிலும் வந்து அத்தேவனை வணங்கிச்செல்வர். இரணியனைச் சங்கரித்ததால் உண்டான கோபந்தீரக் கிழக்கு முகமாய் 'வீற்றிருந்த திருக்கோலத்துடன் யோகாஸனனாய் விளங்கும் அம்முதன் மூர்த்தியையும் அந்தத்தவத்தையும் நான் எக்காலமும் நினைத்து நினைத்துப் பூரிப்படைகிறேன். ஆதலால் நீ அங்கே ஏகி அந்நாராயணன் சேவையால் உன் இஷ்டங்களை ஈடேற்றிக்கொள்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பின்னர் இந்திரத்யும்நன் நீலகண்டனிடம் விடைபெற்றுத் தன் பாரியுடன் நரகேசரியைக் காணப்புறப்பட்டான். அவன் வெள்ளி மலையைவிட்ட பின் இமயமலையையடைந்து அங்கு காற்றைமட்டும் உட்கொண்டு தவமியற்றும் வாலகில்லியரைக்கண்டு வணங்கி "முனிவர் திலகங்களே! இவ்வாறு தவஞ்செய்யும் ஆற்றல் உங்களுக்கு கிடைத்த விதம் எப்படியென்பதைத் தயவுசெய்து தெரிவிக்கவேண்டும் என்றான்.

அத்தபசிகள் "ராஜ ரிஷியே! பிரகலாதனைக் காத்தத் திருமால் 'யோக நரசிம்மன்' என்னும் நாமத்துடன் 'கடிகாத்ரி'

என்னும் சைலத்தில் வீற்றிருக்கிறார். நாங்கள் அங்கு சென்று அத்தலத்திலுள்ள அனுமதீர்த்தத்தில் நீராடி அப்பெருமானைச் சந்தியாகாலத்தில் தெரிசித்த மகிமையால் இவ்வரிய சக்திகளை யடையப்பெற்றோம் என்றனர்.

மன்னன் மகிழ்ந்து "பெரியோரே! அப்புண்ணிய ஸ்தலம் இவ்விடமிருந்து எத்தனைத்தூரத்திலிருக்கிறது?" என்று கேட்க, ரிஷிகள் "அரசே! இவ்விடத்திற்கு ஆயிரம் யோசனைத்தூரத்தில் 'வேகவதி' என்னும் பாலாற்றுக்கு வடதிசையில் 'பரிஷ்காரவதி' என்னும் பட்டினமும், அதன் நிருதி பாகத்தில் கடிகாசலமும் உள; ஆதலின், நீ கங்கையைத் தாண்டி ஸ்ரீசைல சேஷாத்திரிகளைக்கடந்து அவ்விடம் சேரலாம்" என்றனர்.

இந்திரத்யும்நன் அவ்வாக்கைச் செவியாரப் பருகி அந்த இரவை அங்கு அவர்களுடன் கழித்து மறுநாள் விடியற்காலம் மனைவியுடன் நடக்கலானான். பரமசிவன் தெரிசனமும், வாலகில்லியர் நல்வாக்கும் நினைக்க நினைக்க அவன் மனம் ஆனந்தக் கடலில் தெப்பமிடலானது. இவ்வாறு இவன் கங்கையில் நீராடி, ஸ்ரீசைல வாசனையும் அகோபில ஜ்வாலா நரசிங்கனையும் சேவித்து, வேங்கடாசலம் அடைந்து, ஸ்ரீநிவாசனைத் தெரிசித்து, அவ்விடம் விட்டு அதன் தென் திசையிலுள்ள பொன்முகரி யாற்றில் மத்தியான கால அநுஷ்டானங்களைச்செய்து கொண்டிருக்கையில், அந்நதிக்கு வட கிழக்குப் பக்கமாய்த் திரும்பிப்பார்த்தான். தழைத்தோங்கியிருந்த ஆல விருக்ஷத்தில் தொங்கிக்கொண்டிருந்த இரண்டு அரக்கர்கள் அரசன் கண்ணில் பட்டனர். கொஞ்சநேரத்தில் அசுரரில் ஒருவன் பிரம்ம தேஜசுடன் ஆகாயமார்க்கமாய்க் கிளம்பினான்; உடனே ககன மார்க்கமாய் ரிஷிகள் நின்று "ஆ ஹா! கடிகாசல நர



சிம்மர் மகிமையை என்ன சொல்லலாம்! அத்தலத்திலுள்ள அனுமதீர்த்தத்தின் ஒரு துளி நீர் மேலே பட்ட மாத்திரத்தாலேயே இவ்வசுரரில் ஒருவன் பிரம்ம தேஜஸுடன் பல்லக்கில் செல்கிறானென்றால் மற்ற மகத்துவம் எடுத்துச் சொல்லவும் இயலுமோ!" என்று விளம்பிய வார்த்தைகள் அரசனுக்குக் கேட்டன. இவற்றால் அவன் ஆச்சர்யமுற்றுத் திரும்பிப் பார்க்கையில் அங்கே சில தேவ கன்னிகைகள் இருக்கக் கண்டான். இந்தரத்தியும்நன் அவர்களை வணங்கி அங்கு நேர்ந்த சம்பவங்களின் விவரம் யாதெனக் கேட்க அவர்கள் சொல்லலாயினர்.

## அகதிக்குத் தெய்வமே துணை

அரசனே! 'ஸுமதி' என்னும் வைசியன் ஒருவன் இருந்தான். இரு மனைவிகள் அவனுக்குண்டு; அவர்களில் மூத்தாள் நாமம் சுரசை. இளையாள் பெயர் விரசை. ஸுமதி மூத்தாளைமட்டும் இச்சித்து இளையாளை வெறுத்தான்; ஆனால் விரசை பர்த்தாவிடம் அன்பும் பக்தியும் குறையாதவளாய் அவனைப் பிரியாதிருந்தாள். அந்த வைசியன் புத்திரப் பேறடைய வேண்டி ஸ்தலங்கள் தோறும் சென்று தன் முதல் மனைவிக்குப் புத்திரன் உண்டாகவேண்டும் என்று பிரார்த்தித்து வருகையில் கடிகாசலம் அடைந்து அனுமதீர்த்தத்தில் நீராடி நரசிம்ம மூர்த்தியைத் தெரிசித்துத்துதித்து அவர் இனிய அருளால் பிராம்மணனாய் மாறி 'சோமவிரதன்' என்னும் நாமம் பெற்றான். அவன் அத்தருணத்தில் வார்த்தை பிசகி 'இளையாளுக்கு ஒரு புத்திரன் பிறக்கக்கிருபை பாலிக்கவேண்டும்' எனக் கேட்டுச் சிங்கப்பெருமானால் அவ்வாறும் பெற்றான். அதன் பின் அவன் நினைத்துப்பார்த்து 'ஆ! என்ன காரியம் செய்தேன்! மூத்தாளுக்கல்லவா மைந்தன் உண்டாக வேண்டும்?

தான் இளையாளுக்கென்று கேட்டுவிட்டு மதி மோசம் போனேனே! என்னால் நானே கெட்டேனே!" என்று அன்றிரவெல்லாம் வருந்தி மறுநாள் உதயகாலை அனுமதீர்த்தத்தில் நீராடி மாருதியைப் பணிவாம் தொழுது 'ஆஞ்சநேயா! என் அருமை மூத்தாளுக்கு இரண்டு மக்கள் உதிக்கவேண்டும்' என, அனுமார் 'அவ்வாறே ஆகும்' என்றார். உடனே ஸமாதி என்பவனாயிருந்த சோமவிருக அந்தணன் மகிழ்வுடன் தேனு சைலம் என்னும் இடமடைந்தான். அந்த மலையின் கிழக்கில் ஓர் விசாலமான பாறையில் ஓர் நாள் பல பல விதமாய்க் கல்வி புரிந்துகொண்டிருந்த அசுர தம்பதிகளைச் சோம விரதன் கண்ணாரக்கண்டு அதனைத்தன் மனத்தில் பசு மரத்தாணிபோல் பதியச்செய்து தன் மனைவியைக் கூடுந்தோறும் அரக்க ரீதிகளை நினைத்து அநுசரித்துவந்தான். இதனால் இவன் சங்கல்பப்படி மூத்தவளுக்கு இரண்டு புத்திரரும் இளைய விரசைக்குத் தேவ விரதன் என்னும் ஒரு மகனும் உதித்தனர். அவ்விரசை மகனுடைய தௌகித்திரன்தான் உலகில் பிரக்யாதி பெற்று விளங்கும் துருவன்.

## சுவரதன் ; அனுவரதன்

இது நிற்க விந்திய மலையிலுள்ள ஓர் காட்டில் தபசி ஒருவர் இருந்தார். சுவரதன் அனுவரதன் என்னும் இரண்டு வேடுவ சகோதரர்கள் அம்முனிவர் தங்குமிடமெங்கும் வெய்யில் படாமலிருக்கும்படி பர்ணசாலைகளையுண்டாக்கி அவரை உபசரித்துவந்தனர். அவர்கள் ஒரு நாள் அந்தத் தவசியை வணங்கி பிராமணத்துவம் அடையத்தக்க மந்திரத்தை உபதேசிக்கும்படி கேட்டுக்கொள்ள அம்முனிவர் வேடுவர் தம்மைப் பரிகசிப்பதாயெண்ணி 'மிருக ஏவ அஹம்' என்னும் மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்துப்போனார். அதை இடை-



விடாமல் ஜெபித்து, அம்மந்திரத்தில் 'நான் மிருக மாகிறேன்' என்று கேட்டபடி சில காலத்தில் இருவரும் இரண்டு மான்களாய் மாறினர். மஸ்கரி (ரிஷி) சில நாள் பொறுத்து அங்கடையவே, விலங்குகளாய் மாறின வேடுவ சோதரர் முனிவரை வணங்கித் தங்கள் கேட்டைக் கூறி முறையிட்டனர். ரிஷி 'இனி உங்களைப் பிராமணராக்க முயல்வேன்' என்று பன்னிரு அக்ஷரங்கொண்ட விஷ்ணு மந்திரத்தை உபதேசம் செய்து 'நீங்கள் இதனை உச்சரித்துக் கடிகாசலம் போய் மலை வலம் வந்து அங்குள்ள அனுமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வீராக ; *ஸேவா விதிகளையநுசரித்து நடப்பீர்களாக ; அதனால் நீங்கள் வேதியராவீர்கள்' என்றருளிச்சென்றார். அவர்கள் அவ்வாறே ஜெபம் செய்துக் கடிகாசலத்தில் மிருக உருவம் நீங்கிப்பிரம தேஜசுடன் விளங்கினர்.

அச்சகோதரர் ஒரு நாள் தங்களுக்குப் பர்ணசாலை ஏற்படுத்திக்கொள்ள வெண்ணி சிலாபுஷ்கரணி (வராக தீர்த்தம்) க்கரைக்குப்போய் அங்கிருந்த மூங்கிலைக்கொண்டுவர யத்தனித்துச் சில புதர்களை யழித்தனர். அங்கே தவம் செய்துகொண்டிருந்த விப்ர சேகரர் என்னும் முனிவர் தம்மால் பாதுகாக்கப்பட்டுவந்த ரமணீயமான புதர்களை யழித்ததற்காகக் கோபித்து அவர்கள் மேல் கமண்டல நீர் இறைத்து 'நீங்கள் நெறி பிசகி நடக்கும் சோமவிரதன் வயிற்றில் அரக்கராய்ப் பிறப்பீர்களாக' என்று சபித்தார்.

---

* **ஸேவா விதிகள் :**—மனத்தால் பகவானை ஸ்மரித்தல் : வாக்கால் துதித்தல் ; தேகத்தால் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்தல் ; ஆகாராதிகளைக் கூடுமானவரையில் குறைத்தல் ; பரநிந்தை வீண் சம்பாஷணை அகற்றல் ; ஸுகமான படுக்கையும் துஷ்டர் ஸகவாஸமும் வெறுத்தல் முதலியனவாம்.

அப்போது அனுவாதன் என்பான் நடுங்கி அத் தபசியின் பாதங்களில் விழுந்து மன்னிக்கும்படிக்கெஞ்ச, விப்ரசேகரர் இரங்கி ' நீ ஊர் வசியின் கூந்தலிலிருந்து அனுமதீர்த்த நீர்த்தி வலை மேலே பட சாபம் நீங்கி மால் பதம் சேர்வாய்' என்று மறு சாபங்கூறி மறைந்தார். சுவாதன் க்ஷமிக்கும்படிக் கோராத தால் விமோசனமார்க்கம் அடையவில்லை.

உடனே அவ்விருவரும் முன் கூறியபடி தேனு பர்வதத் தருகில் சோமவிரதன் மூத்த மனைவி வயிற்றில் அரக்கர்களாய்ப் பிறந்து இங்கே காணும் ஆலமரக்கிளையில் தொங்கலானார்கள். இப்போது ஊர்வசி கடிகாசல அனுமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஆகாயமார்க்கமாய்ச் சென்றாளாதலால், அவள் கூந்தல் நீர்த்துளி அனுவாதன் மேற்பட்டு ரிஷிகள் வாழ்த்த துந்துபி முழங்க விஷ்ணு லோகம் சென்றான்.'' என்று கன்னியரால் சொல்லக்கேட்ட மன்னன் கடிகாசல க்ஷேத்திர தீர்த்த வைப வங்களை எண்ணி யெண்ணி அகமகிழ்ந்து கன்னியரிடம் விடை பெற்று முன்செல்ல வாரம்பித்தான்.

## இந்திரத்யும்நனும் இந்திரனும்

இந்திரத்தியும்நனும் அவன் சதியுமாகக் கடிகாசலத்தை நோக்கிக் கொஞ்சதூரம் போவதற்குள் அவர்கள் எதிரில் தேவ பதியான 'இந்திரன்' இந்திராணி சகிதமாய் அமரர் புடை சூழப் பிராப்தமாயினன். அவனைக்கண்ட மண்ணரசன் வணங்கி இன்னானென அறிந்து பெரிதும் அதிசயமும் சந்தோஷமுங் கொண்டான். தேவராஜன் இந்திரத்தியும்நனை நோக்கி விஷ்ணு அம்சத்தால் அரசனாயும், பக்தியின் பெருமையால் தவசியாயும் விளங்கும் புண்ணிய புருஷா! வந்தனம். உன் வருகையை எதிர் பார்த்து நெடுநாளாய்க் காத்திருந்தேன்; இன்றே என் எண்ணம் கை கூடியது '' என்றான்.



சுரபதி கூறியதன் விபரம் அறியாதவனாய் நரபதி "வானரசே! தங்கள் மனக்கருத்து யாது?'' எனலும் புலந் திரன் சொல்லானான்.

பக்தசிரோன்மணீ! நீ செல்ல விரும்பும் கடிகாசலத்துக் குப்பக்கத்தில் 'நரசிங்கபுரம்' என்னும் அழகிய பட்டினம் இருக் கிறது. கிருதயுகத்தில் அதனைச் 'சுரதன்' என்னும் அரசன் ஆண்டுவந்தான். சில காலத்தில், காலகேயாதியர் துணைவ னான 'கும்போதரன்' என்னும் கொடிய அசுரன் சிவனிடம் தவம் செய்துபெற்ற அபார வரங்களால் கருவமுற்றுத் தன் குலத்தவரான இரணியன், இரணியாக்கன் முதலியோரைப் போலவேதானும் நடக்கத்தலைப்பட்டான். சுரதனைத் துரத்தி விட்டு நரசிங்கபுரத்தைக் கவர்ந்து இன்றும் ஆண்டுவருகிறான். இவனுக்குச் 'செங்கோல்' என்பதே தெரியாது; கொடுங்கோல் மட்டுமே இவனிடம் தாண்டவமாடுகிறது. விஷ்ணு பக்த ராவது, தவசிகளாவது இவன் கண்ணில் பட்டால் அவர்களைப் பிடித்து உடனே தின்று விடுகிறான். அல்லது தான் அருந் தும் மது மாமிசக்குடங்களைத் தலைமேல் தூக்கி வரும்படிக் கட்டளையிடுகிறான். இவன் பார்வையில் சிக்கிய எந்தப் பெண்ணும் தன் கற்பென்னும் பூஷணத்தை யிழக்காமலிருப் பது அரிதாயிருக்கிறது.

இவ்விஷயங்களெல்லாம், ஓர் நாள் நரசிங்கமூர்த்தியைச் சேவிக்கக் கடிகாசலம் சென்றபோது எனக்குத் தெரியவே நான் வனக்கொதிப்புற்று நரகேசரியின் முன்பு கரங்கூப்பி நின்று, பலவாறு துதித்துச் சுரதனுக்குத்தானிழந்த ராஜ்ஜியமும், கும்போதரனுக்கு அழிவும் அருளும்படி வேண்டினேன். அப் போது 'லக்ஷ்மீ நரசிம்மன்' பெருஞ்சோதி வடிவுடன் என் முன் தோன்றி 'இந்திரா' வருகிற திரேதாயுகத்தில் என் அம்

சத்துடன் இந்திரத்யும்நன் என்பான் பூமியில் பிறந்து வடமதுரையை ஆண்டு வருகையில், ஓர் நாள் ஒரு மானால் க்ஷத்திர குல தர்மத்தில் வெறுப்புற்று நமதிடம் தேடி பிராமணத்துவம் பெற வருவான். அவன் மாருதியின் துணை வலியால் கும்போதராதியரை வென்று இந்நரசிங்கபுரத்தை நீதி வழுவா நேர்மையுடன் அரசாள்வான். அதன் பின் நமதருளால் அவன் பிராமணத்துவமும், நமது லோகமும் அடைவன். சுரதன், சாலிவாகன காலத்தில் யோக நித்ராப்பிரசாதத்தால் மீண்டும் நாட்டைப்பெறுவான்." என்று அருளக்கேட்ட நான் மகிழ்ந்து நகர்த்திரும்பினேன். அதிர்ஷ்டாநுகூலமாக இன்று என் சபைக்குவந்த திரிலோக சஞ்சாரியான நாரதர் உன் வருகையையும், நீ இங்கிருப்பதையும் உரைக்கவே தாயைக் காணவரும் கன்றைப்போல ஆனந்தத்துடன் வந்தேன்" என்றுரைத்து இந்திரத்யும்நனைத் தழுவிக்கொண்டான். மண்ணிறைவனும் விண்ணிறைவனும் சிறிது நேரம் ஆலிங்கனத்தில் ஈடுபட்டு அளவளாவினர்.

பின்பு இந்திரத்யும்நன் அவ்வரக்கக் கூட்டத்தை அழிக்க அவசரங்கொண்டான்; உடனே இந்திரன் தன் அரிய சக்தியால் நால்வகைப் படையும் பல அஸ்திரங்களும் உண்டாக்கித் தந்ததுடன், அவனுடனிருந்த அக்நி, எமன், நிருதி, வாயு முதலியோரும் பல திவ்யாஸ்திரங்களை ராஜரிஷிக்குக் கொடுத்து வாழ்த்தியனுப்பினர்.

## உம்பரை வாட்டிய கும்போதரன்

நரசிங்க புரத்தை யதேச்சையாய்க் கொடுங்கோல் புரிந்து வரும் கும்போதரன் அரக்கர் புடை சூழக் கொலு வீற்றிருந்தான். அவன் சரீரம் கருத்துப் பெரிய மலை போலிருந்தது; அவ்வசுரன் தேகத்திலே செஞ்சந்தனம் பூசி, நீல வஸ்திரம்



தரித்து சிவந்த கண்களுடன் உயர்ந்த ஆசனத்தின்மேல் தெற்கு நோக்கி உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிராக நூற்றுக்கணக்கான மதுக் குடங்களும், பலவகை மாமிசத் தட்டுகளும் வரிசை வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன; அக்கொலுக்கூடம் பெரிய கொலைக் கூடத்தைப் போல் துர் நாற்றத்தால் நிரப்பப்பட்டிருந்தது. சபை முழுதும் ஆரவாரமும், கொக்கரிப்பும், கூத்தாடலும் குடி கொண்டிருந்தன. மாமிச மதத்தாலும், மதுவின் மயக்கத்தாலும் அசுரக் கூட்டம் சவந்தின்னும் கழுகுகளை ஒத்திருந்தது.

அரசவை இவ்வாறு ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கும்போது, திடீரென அனைவருக்கும் நடுக்கமும், பிரமிப்பும் தரக்கூடிய பேரொலி ஒன்று கேட்டது. கும்போதரனும் கொஞ்சம் துள்ளி விழுந்தவன் போல் காணப்பட்டான். அதனால், அங்கு கலவையும், குழப்பமும் மிகுந்தன. உடனே அரக்கர் தலைவன் "அடே! என்ன ஆச்சர்யம்! என்றும் கேட்டிராப் பெருஞ் சத்தம்! காரணம் எது வாயிருக்கும்? ஒலி வந்த திக்கை நோக்கி விரைந்து சென்று காரணத்தை அறிந்து வாருங்கள்" என்றான் உடனே 'காமுகன்', 'துன்முகன்' என்னும் இருவர் துரிதமாய்ச் சென்று கொஞ்ச நேரத்தில் திரும்பிவந்து கும்போதரன் முன்னே நின்றனர் அஞ்சா நெஞ்சரான அவர்கள் அந்தச்சமயம் மனமும் கண்ணும் இருண்டவர்களாய்க் பயம் என்னும் தேவதைக்கு தம் வீரம் என்னும் தைரியத்தைப் பறி கொடுத்தார் போல் காணப்பட்டனர். ஆயினும் கும்போதரனுடைய அவசரமான கேள்விகளால் நா குழறக் கூறலாயினர்.

அசுர சிகாமணியே! சிவனிடம் சிரேஷ்ட வரங்கள் பெற்ற தவமணியே! தேவரும் அஞ்சும் தேக பலம் கொண்ட

ராஜமணியே! குவலயம் நடுங்கும்படி இந் நரசிங்க புரத்தை யாளும் கொடுங் கோன்மணியே! நாங்கள் பார்த்த என்றும் கண்டும் கேட்டுமிரா விபரீத விந்தையை என் சொல்வோம்? இந் நகருக்கு அரை யோசனை தூரத்தில் நால் வகைப் படைகளை அணி நிறுத்தி யுத்தகோலனாய் நின்று தேவரீர் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் ஓர் மானிடப் பூச்சி செய்த ஜெய சங்கக் குணத்தொனியே நாம் கேட்ட எதிர் பாராப் பேரொலி. இமையார் காலனே! அவன் பக்கத்தில் பெண்ணொருத்தியும் இருக்கக் கண்டோம். ஆகா! என்ன அழகு! என்ன அழகு! சாப்பிட்டால் வெகு ருசியாயிருக்கும்." என்றனர்.

இதனைக் கேட்ட கும்போதரன் கண்கள் சிவக்க மீசை துடிக்கத் துள்ளிக் குதித்தான்; தரையைக் காலால் உதைத்தான். பற்களைப் பல முறைக் கடித்தான். அவன் முகத்திலிருந்து அக்நி தேவனும் வெளிப்படுவான் போல் இருந்தது. "ஆ! என்னுடன் போராட வந்தவனும் உண்டா? நான் யாரென அவனுக்குத் தெரிய வில்லையா? அவன் எப்பேர்ப் பட்ட தைரிய சாலியாயிருப்பான்? சமுத்திரத்தில் கலந்த நீரோடை அப்புறம் தலைகாட்டவும் கூடுமோ? அவன் நரனானாலென்ன, சுரனானாலெனக் கென்ன? அன்றி அம் மூவரில் ஒருவனே ஆயின் என்ன? என் பாகு பலத்திற்குமுன் அந்தக் கொசு எம்மாத்திரம்? எப்படியோ அதிர்ஷ்ட வசத்தால் நம் மனைவருக்கும் இன்று கொழுத்த வேட்டை கிடைத்து விட்டது." என்றான்.

அப்போது காமுகன் கரங்கூப்பி "மகாராஜா! தங்களை அந்த மனிதப் பயலுக்குத் தெரியும் போலிருக்கிறது; இந்த இராஜ்ஜியத்தை விட்டு ஓடாவிட்டால் தங்கள் உடலைத் துண்ட



மாக்கிய நாய் நரிகளுக்கு இரையிடுவதாய்க் கூறினான். அவன்' என்றான்.

இதைக் கேட்டதும் அரக்கன் இன்னும் உக்கிராவேசங் கொண்டான். இதற்குள் மந்திரி ஒருவன் "அடே! அழகான பெண் ஒருவள் இருப்பதாய்க் கூறினாயே; அவளைக் கொண்டு வந்தால் அரசருக்கு அநுகூலமாயிருக்கும். மனைவியின் பிரிவால் அந்த மானிடனும் மாள்வன்." என்று பக்குவம் கூறினான். உடனே அசுரன் மனம் பெண் பேச்சால் ஒரு விதத்தினுசாக மாறியது. "இதோ; இப்போதே போய் அந்த நரனைக் கொன்று நாரீமணியைக் கொண்டு வருகிறேன்." என்று பிதற்றிக் கொண்டே எழுந்தான். இதைக்கண்ட 'வக்கிரதந்தன்' என்னும் சூரன் "அரசே! தங்களுக்கு என் இந்தச் சிரமம்? நான் முன் இருக்கிறேன். துணைவர் இருக்கின்றனர். தேருக்குக் கோவேறுக் கழுதைகள் ஆயத்தமாயிருக்கின்றன. நொடிக்குள் அந்த மானிடப் பதரை நசுக்கிப் பொசுக்கிக் கன்னிகா ரத்தினத்தைத் தங்கள் தாளில் சமர்ப்பித்துச் சன்மானம் பெறுகிறேன்." என்று ஆர்ப்பரித்தான். உடனே கும்போதரனால் அனுமதி அளிக்கப் பெற்று யுத்த களத்தை நோக்கிப் புறப்பட்டான். வழியிலே இவன் தேரின் மேல் கழுகு உட்கார்ந்தது. சில கழுகுகள் மேலாகச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன. சுழல் காற்று சில துரும்புகளை வானத்தில் பறக்கவிட்டு "ஹே! வக்கிர தந்தா! இந்திரத்யும்நன் அம்பு என்னும் காற்றால் உன் உயிர் என்னும் துரும்பு இப்படித்தான் பறக்கப் போகிறது என்பதேபோல் அபசகுனங்களைக் காட்டிற்று. ஆனால் வக்கிரதந்தனோ எதனையும் பொருட்படுத்தாமல் சென்று போர் முனைச் சேர்ந்துத் தன் முழுபலமும் காட்டிச் சமர் செய்தான்; ஆயினும் கொஞ்ச நேரத்திலே இந்திரன் போற்றும் இந்திரத்யும்நனால் மாண்டான்.

அவனுக்குப்பின்னால், குட்டி ராக்கதர்களெல்லாம் படைத் திரளுடன் சண்டைக்கு வந்து, இந்திரத்யும்நன் கணைகளால் உடலும் மனம் நொந்து, பாணம் வருமென்று காத்திருந்தப் பருந்துகளுக்கும் நாய் நரிகளுக்கும் தம் இரத்தத்தை உரிமையாக்கி எமனூர்ச் சேர்ந்தனர். அப்புறம் அதிகப் பலசாலியான மந்திரி யாக்கனே போருக்குத் தயாரானான். தேரிலே கோவேறுக் கழுதைகளைப் பூட்டினான். கொடிச் சீலைகளை இரதத்தின் நாலாபக்கமும் பறக்க விட்டான். தன்னைப் பலவிதமாக அலங்கரித்துக் கொண்டான். தன் முன்னால் சம்பவித்த மரணச் சடங்குகளையெல்லாம் கண்டும் கவனியாமல் இறுமாப்புடன் யுத்தகளம் குறுகினான்.

## ஆஞ்சநேயர் சங்கு சக்கரம் பெற்ற வரலாறு

இஃது இங்ஙனமிருக்க, கடிகாசலத்திலே ஸ்ரீ யோக நரசிங்கர் சந்நிதியில் தேவர்களெல்லாம் குழுமினார்கள். அவர்கள் நரஹரியைப் பணிந்து விண்ணப்பம் செய்து கொள்ளலானார்கள்.

"தேவாதி தேவா! திருவுறை மார்பா! தீன சரண்யா! ஞானலாவண்யா! தூணிலேவந்தத் தூயனே! எந்தாய்; இரண்யனைக் கொன்ற சுடிலா வீரா! நினையல்லால் எமக்குச் சரண்புக இட முண்டோ அப்பனே!" என்று பலவாறு தோத்திரம் செய்தனர். அதற்கிரங்கிய நரகேசரி அவர்கள் முன் பிரஸன்னமாகி "விண்ணோரே! உம் குறையாது?" என வினவினார். அமரர் அய்யனின் அடி பணிந்து "ஆதியந்த மில்லாத சோதியான மாதவா! திருவுள்ளம் அறியாதது ஒன்றுமே யில்லை என்றாலும், எங்கள் மனந்தாளாது கூறிக் கொள்ளும் முறையைக் கேட்டு அருளல் வேண்டும். அதாவது தற்போது நரசிங்க புரத்துக்கு அருகில் இந்திரத்யும்நனுக்கும் கும்போதரனுக்கும் நடந்து கொண்டிருக்கும் கடும் போரில் நரபதிக்குத் துணையாக நமது 'ஆஞ்சநேய' ரைத் தாங்கள் அனுப்பிவைக்க வேண்டுமென்பதை அடியோங்கள் பிரார்த்தனை." என்றனர். லக்ஷ்மீபதி மகிழ்ந்து 'அவ்வாறே ஆகுக' என்றுரைத்துத் தமக்குக் கீழ்ச் சிகரத்தில் எழுந்தருளியுள்ள அனுமாரை யழைத்து "மாருதீ! பக்த சிகாமணி! பானுவிடம் கலை பயின்ற நவ இலக்கண பண்டிதா! அஞ்சனை பாலா! சிறிது தூரத்தில் நடந்து கொண்டிருக்கும் பெரும் போருக்குச் சென்று, இந்திரத்யும்நனுக்குத் துணைவனாய் நின்று அசுரப் பூண்டை அழித்து வருவாயாக. இச்சமயம் உனக்கு வேண்டிய வரம் கேள்" என்றார்.



அஞ்சலி பந்தனாய் நின்ற அனுமார் "பெருமானே! சங்கு சக்கரம் பெறவேண்டும் என்னும் ஆவல் எனக்குப் பல நாளாயுண்டு. அவை வழங்கப் பெற்றால் அடியேன் பாக்கியனே." என்றார்.

திருமால் மலர்ந்த முகத்துடன் மாருதியை நோக்கி "மதி வல்லோய்! அவ்வாறே சங்கும், சக்கரமும், மற்றிரு புஜங்களும் அளித்தோம். அசுரர் அழிவுற்றபின் நீ புரியப் போகும் அருந்தவத்தால் உனக்குப் 'பிரமபட்டம்' கிடைக்கும்" என்று திருவாய் மலர்ந்தருளி, தம் சுதர்ஸனத்தால் ஒரு சக்கரமும், பாஞ்ச சந்நியத்தால் சங்கும் உண்டாக்கி, அவற்றையும் பின்னும் இருபுஜங்களையும் மாருதிக் களித்து வாழ்த்தி யனுப்பினார். சதுர் புஜ சங்க சக்கரம் பெற்ற ஆஞ்சநேயர் அமரர் மனம் ஆனந்தத்தில் ஆழும்படி அதிசீக்கிரத்தில் யுத்தகளம் புகுந்தார்.

இவரைக் கண்டதும் இந்திரத்யும்நன் அடக்கமுடியாத ஆனந்தங்கொண்டு தேரைவிட்டுக் கீழிறங்கி அனுமாரைப் பல

முறை வலம் வந்து நமஸ்கரித்துக் கொண்டாடினான். மாருதி அன்புடன் அவனை ஆசீர்வதித்து "புண்ணிய மிக்கப் புரவலனே! இச்சமரில் உனக்குத் துணை புரியவே நாம் இங்குற்றோம்; ஆதலால், இனிவரும் போரை நாமே நிகழ்த்துவோம்; நீ வாளாவிரு" என்றார். இதனைக்கேட்ட மண்ணரசன் உள்ளும் புறமும் பூரிப்படைந்து அனுமார் சண்டை செய்வதை ஆச்சரியத்துடன் பார்க்கலானான்.

அஞ்சனை பாலன் நரகரி யீந்த சங்கை வாயில் வைத்து ஊதினார். அந்தக் சுபத்தொனியால் அசுரப்படை நிலைதடுமாறி நாலா பக்கங்களிலும் சிதைந்தோடத் தலைப்பட்டது. இதனைக் கண்ட மந்திரி யரக்கன் மாருதிமேல் பல அஸ்திரங்களை விட்டு, அனுமாரால் அடிபட்டு மூர்ச்சையுற்றான். சிறிது நேரத்தில் தெளிந்தெழுந்து மீண்டும் கடும்போர் புரிந்தான். அப்போது அனுமாருக்கு ஜெயம் உண்டாவதை எதிர்பார்த்திருந்தத் தேவர்களை வருத்த ஆகாயத்திற் பாய்ந்தான். சுரரும் அசுரனைத் தாக்கத் தயாராயினர். இரு பக்கத்திலும் கொஞ்சநேரம் சண்டை நடந்தது. இதற்குள் மாருதி தன் வாலை வானில் வீசி அசுரனை அதனால் இழுத்துத் தரையில் விட்டார். இதைக்கண்ட இந்திரத்யும்நன் அளவிலா சந்தோஷத்தால் தான் தவத்தாலடைந்த அழகிய முத்துமாலையை அனுமார் கழுத்தில் சூட்டினார். மந்திரியரக்கன் இரதத்திலேறி இந்திரத்யும்நனுடன் சண்டை செய்தான். அந்த ராஜ ரிஷியின் திவ்வியாஸ்திரங்களால் தன் துணைப்படை யாவையுமிழந்து நிராயுதபாணியாய் நிலத்தில் நின்றான். ஆனாலும், வானர வீரனைத்தாக்க வெண்ணி ஓர் மலையுச்சியில் உட்கார்ந்தான். அதேசமயம் பூவேந்தன் எய்த பாணத்தால் அவன் வலக்கரம் அறுபட்டான். அதனால் துக்கமும், கோபமும் கொண்டு அரசனை வீழ்த்தக்கருதி தன்



ஒரு கையால் பிடுங்கிய மரத்துடன் ஓடி வந்தான். உடனே மாருதி அவ்விருக்ஷத்தாலேயே அவனைப் புடைத்துக்கொன்றார்.

அசுர அமைச்சன் ஆவி நீத்தபின், கும்போதரன் மக்களான 'தூமாக்ஷன், பீமாக்ஷன்" என்னும் இருவர் ரணகளம் புகுந்தனர். வரும்போது சாரதி தவறி விழுந்ததாலும், தேர்க் கலசம் முறிந்ததாலும், தனுசு கை நழுவிப் பூமியிற் பட்டதாலும், புரவிகளின் கால்கள் பின்னுக்கிழுத்தமையாலும் ஏற்பட்ட அவசகுனங்கள் முன்னால் அவர்களுக் கேற்படப்போகும் தோல்வியைக் காட்டின? அவர்களோடு வந்த 'பாதாளபேதி' என்னும் யானை அனுமார் கையால் குத்தப்பட்டுக்கீழே வீழ்ந்தது. உடனே தூமாக்ஷன் பல அஸ்திரங்களை மாருதி மேல் பிரயோகித்தும் பயன் படாமையால், தன் வல்லமை பலிக்காதென்பதை உணர்ந்துப் பாதாளத்துக்கு ஓடிவிட்டான். பீமாக்ஷன் பலவாறு சண்டை செய்து முடிவில் வானத்தில் சென்றான். அனுமாரோ அவனை விடாமல் தம் கரத்தால் அவன் காலைப்பிடித்துக் கீழே மோதியடித்தார். அதனால் அசுர மைந்தன் உயிர் இழந்தான்.

முடிவில் காலகேய கும்போதரன் கடுஞ்சினத்துடன் வந்தான். முதலிலே இந்திரத்யும்நனுக்கும் அவனுக்கும் பெரும் போர் நடந்தது. அசுரன் நரபதியின் மேல் அபார மகிமைப்பெற்றச் சூலாயுதத்தைப் பிரயோகித்துவிட்டான். இதைக்கண்ட மண்வேந்தன் அவ்வாயுதத்தை வெல்லும்படி நாராயணாஸ்திரத்தை ஏவினான். இவை யிரண்டும் சந்திக்கையில் மாருதி கரத்தால் தடுக்கப்பட்டுச் சினந்தணிந்தன. அரக்கன் கோபங்கொண்டு அனுமாரைப்பல அஸ்திரங்களால் தாக்கினான். சூரியன் முன் தீவிரங்கொண்ட பனிபோல் அப்பாணங்கள் யாவும் அழிந்தன. இதற்குள் கும்போதரனுடைய

தேர், யானை, புரவி, காலாள் முதலிய படைகள்யாவும் மாருதியால் நாசமாயின. இப்போது அசுரனுக்குத் தன்னால் அனுமானை வெல்ல முடியாதென்றும்' இன்னுஞ்சற்று இங்கேயே தங்கினால் தானும் எமபுரம் சேர்வது நிச்சயம் எனவும் தெரிந்துவிட்டது. அதனால் அவன் மேலே கிளம்பினான். அனுமார் உடனே ஒரு அறை கொடுக்கத் தரையில் வீழ்ந்துப் பாசாங்கு செய்துப் பாதாளம் போய்ச்சேர்ந்தான்.

## மகுடம் பூண்ட மகபதி

இதைக்கண்ட தேவர்கள் நரபதி மீதும் வானரவீரன மேலும் மலர் மாரி பெய்தனர்; துந்துபி முழங்கியது; முனிவர் துதித்தனர். யாவரும் ஒன்றுகூடி இந்திரத்யும்நனுடனும், அஞ்சனைத்தனயனோடும் நரசிங்கபுரத்தை யடைந்தனர். இந்திரத்யும்நன் தன் பத்தினியோடு அமிர்த தீர்த்தத்தால் நீராட்டப்பட்டு அரியாசனத்தில் வீற்றான். தேவர்கள் சுடர் பாவும் மணி முடியை அவன் சிரத்தில் சூட்டி இந்திரத்யும்நன் மகாராஜனே! சிங்கபுரத்துச் செங்கோலை மங்களமாய்க் கரத் தேந்துவாய்! உனக்கு இப்போது தேவையான வரங் கேள்" என்றனர். அரசன் "பெரியோரே! பிராமணத்துவமும், மால் திருவடியும் அடையும்படி என்னைச் செய்ய வேண்டும்" என்றான்.

அமரர் "பக்த சிரேஷ்ட! நின் மனம் போலவே அவை நிறைவேறும். நீ இது முதல் கடிகாசலத்தில் எழுந்தருளியுள்ள யோக நரசிங்கப்பெருமான் திருவாராதனங்களைச் சரிவர நடத்தி வருவாயாக. திருக்கடிகைத்தல மகிமையைப் பெரியோரால் கேட்டறிந்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, லக்ஷ்மீநாயகனைக் சேவித்திருப்பாயாக. இவற்றால் உனக்கு மறை குலமும்



இறைபதமும் எளிதில் கிடைக்கும்" இன்று முதல் இந்நகரம் 'அனுமத்புரி' என்னும் நாமங்கொண்டிலங்கும்" எனக் கூறி 'அனுமத் சைலம்' சென்று அங்கே அனுமாரை விட்டு, அவரைத் துதித்து விடை பெற்றுத் தம்தம்மிடம் சென்றனர்.

இந்திரத்தியும்நன் நரசிங்கபுரத்தை ஆண்டுவருகையில் ஓர் நாள் சாயச்சந்தியில் தன் பத்தினியுடன் தங்கப்பல்லக்கிலேறிச் 'சிலா புஷ்கரணி'* என்னும் தீர்த்தக்கரைக்கு வந்து, அங்கே

---

* சிலாபுஷ்கரணி என்னும் வராகதீர்த்தம் இக்காலத்தில் 'பெரப்பங்குளம், என்று வழங்கப்படுகிறது. இதற்கருகில் பாழடைந்த பழைய கோயில் ஒன்று காணப்படுகிறது. சோளசிங்கபுர யுத்தத்தின் (Battle of Sholinghur), சமீபகாலத்தில் இக்கோயிலும் இதைச்சுற்றிலும் நங்காய் விளங்கிய 'பத்மாபுரம்' என்னும் பதியும் மகம்மதியரால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. முற்காலத்தில் நரசிம்மர் மலைக்குச்செல்லும் வழி இப்போது இருக்கும் படிகள் அன்றாம். இந்த வராக தீர்த்தின் வழியாக லக்ஷ்மீ தீர்த்தம் போய் அதையடுத்துள்ள செங்குத்தான குன்றில் செதுக்கப்பட்டுள்ள சிறிய படிக்கட்டுகளின் மூலமாய் ஏறி நரசிம்மர் மலைக்குச்சென்று கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. இக்குன்றின்பேரிலே இப்போதும் காணப்படும் பழைய கோவில் தான் அமிர்தவல்லித்தாயார் எழுந்தருளியிருந்தாரென்றும், முற்கூறிய காலத்தில் மகம்மதியரால் அழிவுறாதபடி மறைக்கப்பட்டிருந்து பின்னர் ஸ்ரீ யோகநரசிம்மர் அருகிலேயே விளங்கலாயினார் என்றும் அறிகின்றோம். அக்காலம் வரையில் அர்ச்சகர் முதலானோர் மேற்சொன்ன வழியாக வந்து வாரம் ஒரு முறை மட்டுமே திருவாராதனங்களை நடத்திவந்தனரென்றும் கூறப்படுகிறது. பத்மாபுரம் அழிவுற்றபின் அங்கிருந்த உற்சவவிக்ரகம் சோளசிங்கபுரக் கோயிலில் வைக்கப்பட்டு இது நாளும் தேர்த் திருவிழாக்கள்

வசிஷ்டர் ஆசிரமம் கண்டு, சிவிகைவிட்டிறங்கி வசிஷ்ட முனியை வணங்கி அவரால் அளிக்கப்பட்ட ஆசனமொன்றில் அமர்ந்து அருந்ததி நாதனைப்பார்த்து " முனி சிரேஷ்டா ! இக் கடிகாசல க்ஷேத்திர மகிமையும், தீர்த்தப் பிரபாவங்களும் எடுத்துரைத்து, நான் இப்பிறவிலேயே பிராமணனாகி மோக்ஷமடையும் மார்க்கத்தையும் போதிக்கவேண்டும் " என்று வேண்ட வசிஷ்டர் கூறலானார்.

" அரசர் திலகமே ! அப்படியே சொல்லுகிறேன் ; நின் மனைவியுடன் பக்தியாய்க் கேட்பாயாக."

அவ்விருத்தாந்தம் பின்வருமாறு :—

## கிரிப்பிரதக்ஷிணம் *

கிரிப்பிரதக்ஷிணம் மஹாப்பிரதக்ஷிணம் எனவும், உள்

---

சகிதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால் த்வாஜாரோகணம் மட்டும் மலைமேலேயே நடக்கிறது.

மலையடிவாரத்தில் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட சத்திரம் ஒன்று இருக்கிறது. இதைக் கட்டினவரும், ஆற்காடு திவானாயிருந்தவருமான (ராவ் ஜீ என்னும்) பிராமணர் தற்காலம் அதிக சௌகரியமாக இருந்துவரும் படிக்கட்டுகளை ஏற்படுத்தினதாகத்தெரிகிறது.

* கிரிப்பிரதக்ஷணத்தின் வரலாறு மூதல் நூலின் பதினோராம் அத்தியாயந் தொடங்கி பதினெட்டாம் அத்தியாயம் வரையில் ஆங்காங்கு கொஞ்சம் கொஞ்சமே கூறப்பட்டது ஒன்று திரட்டி மேல் குறிக்கப்பட்டது. தற்காலம் யாவரும் கடைசியில் ஸ்நானம் செய்துவரும் பிரம்மதீர்த்தத்தில் கிரிப்பிரதக்ஷிண ஆரம்பத்திலேயே நீராடவேண்டுமென்பதைச் சேவார்த்திகள் கவனிப்பார்களாக.



பிரதக்ஷிணம் என்றும் இருவகைப்படும். முதலில் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பின்பு அக்கி தீர்த்தம், சோம குண்டம், பத்ம ஸரோவரம், வால்மீக, ராம, வஜ்ஜிர, கல்ஹார, தீர்க்க ஸரோவரதீர்த்தங்கள் முதலியவற்றில் நீராடி கடிகாசலத்தைச் சார்ந்த பதினாலு மலைகளையும் வலம் வருதல் மஹாபிரதக்ஷணமாம். இந்தப் பிரதக்ஷணத்தால் சௌனகாதி ரிஷிகள் நரசிம்மருடைய பேரருளுக்குப்பாத்திர ரானார்கள்.

உள் (அந்தர்முக) பிரதக்ஷிணமாவது முதலில் பிரம தீரத்திலிருந்து தொடங்கி, பைரவ, ஹலா வர்த்த, வராஹ, புண்டரீக, கருட, பாபநாசன, அமிர்தகுண்ட, வாம, இரத்தின, வசிஷ்ட, லக்ஷ்மீ தீர்த்தங்கள் முதலியவற்றில் நீராடி வலம் வருதலாம். இந்த பிரதக்ஷணத்தால் பிரம்மா சிருட்டி கர்த்தாவாகவும், குபேரன் நிதி நாயகனாயும், இந்திரன் சுவர்க்க அதிபதியாகவும் ஆயினர்.

## பிரம தீர்த்தம்

ஸ்வாயம்புவ மன்வந்தரத்திலே ஓர் நாள் இந்திரன் வேதங்களைப் பார்த்து " நீங்கள் சிவனைத்தானே துதிக்கிறீர்கள் ? " எனக்கேட்டான்.

அவை " இல்லை ; எங்களால் புகழப்படும் தேவன் பஞ்சமுகங்கொண்ட பிரமதேவனே " என்றன. அதனால் கோபித்த தேவராஜன் வேதங்களின்மேல் தன் [illegible] அவ்வாயுதம் அவற்றைத் துரத்தவே, மு[illegible] பயந்துப் [illegible]னிடம் சரணமடைந்து இந்திரன் செய்கையைக் கூறி முறையிட்டன. ஸரஸ்வதி நாதன் அவ்வச்சிரத்தின்மேல் தன் கமண்டல நீரைத் தெளிக்கவே, அது திரும்பிச் சென்று தன்னைப் பிரயோகித்த இந்திரனையே துர[illegible] இந்திரனே தட்

டித்தடுமாறி, அதினின்றும் மீள அறியாதவனாய் முடிவில் சிவனிடம்போய் “முக்கண்ணப்பா! வேதங்கள் உன்னையே துதிக்கின்றன வென்று விளம்பியதால் பிரமன் எனக்கு இவ்வாபத்தை உண்டாக்கினான். தக்ஷணம் என்னைக்காக்கவேண்டும்” என்றான். உடனே பசுபதி வச்சிரத்தை நோக்கவே அது வேகம் குறைந்துக்கீழே விழுந்தது.

பிரமதேவன் தன்னை அவமதித்தான் என்னும் கோபத்தால்* பரமசிவன் பிரமாவின் ஐந்து சிரங்களில் ஒன்றைக் கிள்ளிவிட்டார். அதனால் நான் முகனாய் மாறிய மால் மகனுக்கு ஐந்தாம் முகம் இருந்தவிடத்தில் ஓர் வடு உண்டாயிற்று. அதனை நீக்கிக்கொள்ளவேண்டி அவர் இக்கடிகாசலமடைந்து தமது பேரால் ஒரு திவ்விய தீர்த்த முண்டாக்கி அதில் ஸ்நானம் செய்து நரசிங்கனைச்சேவித்ததால் முற்கூறிய வடு மறையப் பெற்றார். அது முதல் அத்தீர்த்தத்துக்குப் ‘பிரம தீர்த்தம்’ என்னும் பெயர் உண்டானது. இதில் நீராடும் போது.

“பணிந்தே னுனைக் கடிகாசல நரகேசரி ஹரியே
பகவானே ஜெகத்சோதியே மாவிஷ்ணவெ தேவா”.

எனத்துதிப்பது நல்லது. வியாழக்கிழமையிலும், மாசிமாதப் பௌர்ணமியிலும் இதில் நீராடினால் பெரும் பலன்கள் சித்திக்கும். இத்தீர்த்தக்கரையில் மரங்களை வைத்து வளர்த்தால் இகபர நலங்கள் எய்தும். இதில் ஸ்நானம், செய்து பிதுர்

* சிவன் வீரபத்திரரை ஏவி பிரமாவின் சிரத்தைக்கிள்ளச் செய்தாரென்று, இந்த க்ஷேத்திரத்தைப் பற்றிய ஒரு தமிழ்நூல் கூறுகின்றது. ஆயின் முதனூலில் அவ்வாறு காணோம்.



தர்ப்பணம் முதலியன செய்வதால், யாக பலன் கிடைக்கும்; கன்மம் விலகும்; சந்தானம் உண்டாகும்.

## பைரவ தீர்த்தம்

வெள்ளிமலையில் ஓர் நாள் பரமசிவனும் பார்வதியும் பல விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அப்போது உமாதேவி சிவபிரானை நோக்கி “நாதா! உலகத்திற்கு எதனால் வெளிச்சம் உண்டாகிறது?” என வினவினார். முக்கண்மூர்த்தி * சூரிய சந்திரரே தம்மிருகண்களென்றும் அவற்றால்தான் வெளிச்சம் உண்டாகி உலகை ஜீவிக்கச்செய்கிறதென்றும் அருளினார். அவ்வுண்மையைப் பரீக்ஷிக்க எண்ணிய மலைமகள் தேவனுடைய இரு நேத்திரங்களையும் தமது மலர்க் கரங்களால் பொத்தினார். இதனால் உலகமெங்கும் இருள்மூடி ஜீவ கோடிகள் தவித்து முறையிடலாயின. ஆதலின் பரமன் தம் கண்களை விடும்படிக் கூறுமுன், சூரியன் என்னும் நேத்திரத்தினின்றும் உண்டான வெப்பத்தை ஆற்றாது பார்வதி தம் கரங்களை எடுத்துக் கொண்டார்.

உடனே கதிரும் திங்களும் காட்சியளித்து உலகுக்கு ஒளி யூட்டின. முன் பின் பாராது அவசரப்பட்டு சமஸ்த பிராணிகளுக்கும் இடையூறு விளைவித்த தம் செய்கையை எண்ணி மனம் நொந்த உமாதேவி, அவ்வபசாரம் நீங்குதற்காகக் காஞ்சிமா நகரம் சென்று, கம்பா நதியில் மணலால் லிங்கம் ஸ்தாபித்துப் பூசிக்க வாரம்பித்தபோது, அசுரர் முதலியோரால்

* இந்தப் பிரமாணம் காஞ்சி மகாத்மியத்திலும் காணலாம்; வேளாளர் உற்பவித்ததற்கு இதுவே காரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தடை உண்டாகாதிருக்க வேண்டி தென் பாகத்தில் விநாயகரையும், மேற்கில் சுப்பிரமணியரையும், கிழக்கே நந்திகேசுவரரையும் வட பாகமான கடிகாசலப் பிரதேசத்திலே ஏகசிலா பர்வதச்சாரலில் பைரவரையும் காவல் வைத்துத் தவத்தில் இறங்கினார்.

யோக நரசிங்கர் வீற்றிருக்கும் ஏகசிலா பர்வதத்திற்குத் தெற்கே பிரம்மதீர்த்தத்திற்குக் கீழ்ப்பாகத்தில் இவ்வைரவர் இருக்கிறார்; இவர் நரகரியின் ஆக்ஞைப்படி ஆங்குள்ள தீர்த்தங்களைப் பாதுகாத்து வருகிறார். இவரது இடபாகத்தில் உள்ள தீர்த்தத்துக்குப் 'பைரவ தீர்த்தம்' என்று பெயர். இத்தீர்த்தத்தில் வைகானஸ வாலசில்லியர் நீராடுவர். இதன் ஸ்நானத்தால் பூத பேதாள பிசாச சூநியங்கள் விலகும், இதில் திங்கட்கிழமைத் தீர்த்தமாடுதல் விசேஷ பலனாம்.

## அலாவர்த்த தீர்த்தம்

பைரவர் வீற்றிருக்கும் மலை அவரை யடையப்பெற்ற சந்தோஷத்தால் இறு மாப்படைந்து அமராபுரியைத் தொடுவதுபோல் வளர்ந்தது. தேவராஜன் இதைக்கண்டு அச்சமும் பொறாமையுங் கொண்டு பலராமரிடம் போய் முறையிட்டான். பலராமர் இந்திரன் தூண்டுகோலுக்கு இணங்கித் தன் ஹலாயுதத்தால் இப் பர்வதத்தைத் தாக்கி அதை முன்னிருந்தபடியே செய்தார். அந்தக் கலப்பை ஆயுதம் பட்ட இடத்தில் ஒரு தீர்த்தம் உண்டானது; அதற்கு 'அலாவர்த்த தீர்த்தம்' என்று பெயர். இதன் கரையிலிருந்து சிங்கனைக் குறித்துத்தவம் செய்வோர் சகல சித்திகளும் பெறுவர். அகலிகை இதில் நீராடித் தேவனைத் தெரிசித்ததால் புனிதவதி ஆயினள். திங்கட்கிழமை இதில் ஸ்நானம் செய்தால் அதிக பலன் உண்டு.



## கௌதம தீர்த்தம்

பைரவர் சந்நிதிக்கு வடக்குப் பக்கத்தில் கௌதமர் தவம் புரிகிறார். அவர் பெயர் பெற்றுள்ள தீர்த்தம் ஒன்று அங்கு உண்டு. முன்பு தேவேந்திரன் தனக்குக் குருவாகவே இருந்து நம்பிக்கைத் துரோகம் செய்த விச்சுவரூபனைக்கொன்றான். அதனால் சுரபதிக்கு பிரமஹத்தி தோஷம் பிராப்தமானது. அவன் அத்தீவினைப்பயன் யாவராலும் தீர்க்கமுடியாது கண்டு, முடிவில் கடிகாசலமடைந்து, இந்தக் கௌதமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, நரசிங்கனைத் தெரிசித்தான். அதனால் அப் பாவம் எளிதில் நீங்கியது கண்டு, இந்திரன் மறுபடியும் பைரவ தீர்த்தத்தில் நீராடித் தேவனிடம் சென்று அவருடைய உண்மை ரூபத்தைக காணவேண்டிப் பலவாறு தோத்தரித்தான். அதற்கிரங்கிய நாராயணன் கோடி சூரியப் பிரகாசனாய் அவன் முன்பு காட்சி யளித்தார். தேவராஜன் மெய்ம்மறந்து ஆனந்தக் கடலில் மூழ்கித் திருமாலை பலதரம் வலம் வந்து வணங்கி நின்று ஆயிர நாமங்களால் (சகஸ்ர நாமத்தால்) அவரைத் துதித்தான். ஸ்ரீயப்பதி மகிழ்ந்து " இந்திரா, நீ பக்தியில் மிக்கவன்; உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள் " என்றார்.

விண்ணரசன் " எம்பெருமானே! இவ்வாறு உனைப்பக்தி யாய்த் துதிப்பவர்க்கு நீ கடாக்ஷித்து அருளல்வேண்டும் " என, பிரகலாத வரதன் " அவ்வாறே தந்தோம் " என்று மறைந்தார். ஆகையால் இந்தத் தீர்த்தத்தின் மகிமை அளவிட வொண்ணாதது. வைகாசி மாதம் பௌர்ணமியிலும், சனிக்கிழமைகளிலும் இதில் நீராடிப் பெருமானைச் சேவித்தல் விசேடம்.

## வாமதேவன் அமிர்தம் பெற்றது

முன்பு அமராபுரிக்குச் சமானமான அழகிய நகரத்தை ஆண்டுவந்த கோசிகன் (விசுவாமித்திரன்) வேட்டையாடச்

சென்றபோது இளைத்துப்போய் அவ்வனத்திலிருந்த வசிஷ்ட முனிவரால் தன் பரிவாரங்களுடன் விருந்தளிக்கப் பட்டார். தருப்பை யாசனமும், சடை முடியும், கமண்டலமும், கொண்டுள்ள வசிஷ்ட ரிஷி, சிங்காசனமும், மணி முடியும், வில்லம்பும் பெற்றவரான தமக்கும், தமது படைக்கும் நிர்மானுஷ்யமான வனத்தில் எண்ணவும் முடியாத வைபவ விருந்திட்டது எவ்வாறென்று அதிசயித்த விசுவாமித்திரன் அதற்குக்காரணம் அங்கிருந்த 'காமதேனு' என்னும் தேவலோகப் பசுவே என்றறிந்து, அதை எவ்வாறாயினும் கைப்பற்றிப்போக வெண்ணி, அது வலியாமை கண்டு, வசிஷ்டர் மேல் சினங்கொண்டு அவர் பேரில் அநேக அஸ்திரங்களைப் பிரயோகித்தும், முனிவர் மந்திர சக்தியால் பாணங்கள் யாவும் பாழடையப்பார்த்து, அரசை வெறுத்து, அனைத்தினும் மேலான பிரம்மரிஷியாகத் தீர்மானித்து, வசிஷ்டர் வாயாலேயே அப்பதவியைப்பெற எண்ணி, அதற்காக இமயமலைக்குச்சென்று ஆதித்தனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தார்.

சூரியன் அவர் முன் தோன்றி "விசுவாமித்திரா! உன் காரியம் கைகூடச் செய்யுமிடம் கடிகாசலமே; அந்த க்ஷேத்திரத்தின் மகிமைக்கு உவமை இல்லை. அதனைப் பற்றிய சில விஷயங்களைத் தெரிவிக்கிறேன்; கேள்." என்று சொல்லலானார்.

கிருதயுகத்தில் வாமதேவன் என்னும் பிரம்மசாரி தன் தந்தையிடம் சகல கலையும் பயின்று முடிந்தபின் குரு தக்ஷிணையாகத்தன் பிதாவுக்கு ஏதேனும் கொடுக்க எண்ணி அவர் விரும்புவது யாதெனக் கேட்டான். அவன் தந்தை தம் பிதுர்களுக்குப் பிரீதியாக்கும் பொருட்டு அமிர்தம் தேவை என்றும், பங்குனி மாதத்திற்குள் அதனைக்கொண்டு வந்து கொடுத்தால்



அதுவே குரு தக்ஷிணை யாகுமென்றும் கூறினார். வாமதேவன் அதற்கிசைந்து அமிர்தத்தைக் கொண்டுவரப் புறப்பட்டான். அவன் பலவாறு சிந்தித்து ஒன்றும் தோன்றாதவனாய்த்தன் தந்தைக்குக் குருவான அகஸ்தியரிடம் போய் மார்க்கம் கேட்க ஆர்வங்கொண்டான். உடனே அவர் கடிகாசலத்தில் இருப்பதாயறிந்து அங்கே சென்று 'மலைச்சாரலில் இருந்த ஒரு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த பிராமணனைப் பார்த்து அவனை யாரென விசாரித்தான்.

## அகஸ்திய தீர்த்தம்

அந்தப் பூசுரன் தான் அகஸ்தியர் சீடன் என்றும், அந்தத் தீர்த்தம் அகத்திய தீர்த்தமென்றும், அதன் கரையில் தெற்கு திக்கில் வேதவதி என்னும் பெயர் கொண்ட மகாலக்ஷ்மி தவம் செய்தாளென்றும், சபரி அவர்க்குப் பணியாற்றி வந்ததாயும், திக்விஜயம் செய்து கொண்டு அங்கே வந்த ராவணன் வேதவதியைக் கண்டு மோகங்கொண்டு சபரி எவ்வளவு தடுத்தும் கேளாமல் அத் தவமாதையணுக அவர் அடுத்த யுகத்தில் ஈனக்கிரீவனைப் போகவென்றும் அதன் நாசத்துக்குக் காரணம் தாமே ஆகப்போவதாயும் சபித்து அந்தரத்தான மாயினாரெனவும், கூறியதுடன், திருமகள் வாசம் பண்ணும் அத்திவ்விய தீர்த்தத்தில் செவ்வாய்க்கிழமை ஸ்நானம் செய்துத் திருமாலைச் சேவிப்பார்க்கு அனந்த சுகம் உண்டாகும் என்பதையும் சிறப்பித்துக் சொல்லி வாமதேவனை அங்கிருந்த ஆசிரமத்துக்குள் அழைத்துப்போய் ரிஷிகளால் சூழப்பட்டு வீற்றுள்ள அகஸ்தியரிடம் விட்டான்.

தந்தையின் குருவைக்கண்ட வாமதேவன் அவரைவணங்கி நின்றான். குட முனி யான அகத்தியர் அவனை நோக்கி

"வாம தேவா" ஞான திருஷ்டியால் உன்வருகையின் காரணம் அறிந்தேன். இந்தப் புண்ணிய பூமியில் கால் வைத்ததாலேயே உன் காரியங்கள் கைகூடும் ஏதுக்கள் ஏற்படும்.

இந்தக் கிரியைச் சுற்றிலும் பதினன்கு பர்வதங்கள் உள்ளன. அவை கிழக்கில் நான்கும், தெற்கில் ஒன்றும், மேற்கில் மூன்றும், வடக்கே மூன்றும், வட கிழக்கில் ஒன்றுமாய் அமைந்திருக்கின்றன. இந்த பர்வதம் கிருத, திரேதா, துவாபர, கலியுகங்களில் முறையே பொன், வெள்ளி, தாமிரம் சிலை ரூபத்துடன் விளங்கும். இதனுச்சியில் ஹேமகோடி விமானத்தில் யோகாஸனனாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நரசிங்கனை ஒரே மனத்துடன் துதிப்பவர் நாழியிமைக்குள் பாவம் நீங்கிப் பலனடைவர். இச்சிகரத்தின் கீழ்ப்பக்கமுள்ள குன்றின்மேல் அனுமார் வீற்றிருக்கிறார். அவர் இத்தேவனின் பூரண அருளேயும் பெற்றவர். அவர் பிரம்மசாரியாய் தவம் புரிகிறார். இந்திராதி தேவர்களாலும், முனிசிரேட்டர்களாலும் சதா துதிக்கப்படும் அம்மாருதியின் மகிமைக்கு அளவே இல்லை.

## அனும தீர்த்தம்

அவர் இருக்கும் மலைக்கு ஹனுமத் சைலம் எனப்பெயர். அவருக்குக் கீழ்ப்புறம் பறவைகளால் அலங்கரிக்கப்பட்ட பொற்றாமரை நிறைந்த திவ்விய தீர்த்தமொன்றுண்டு. அதற்கு 'அனுமதீர்த்தம்' என்னும் திருநாமம். அதன் கரையில் ஆஞ்சநேயரால் தேவலோகத்திலிருந்து கொண்டுவந்து நடப்பட்டுள்ள நாவல் மரத்தின் சுவர்ணச் சாயையால், ஆங்குள்ள பட்சி மரம் முதலியயாவும் பொன் மயமாகவே விளங்குகின்றன. 'அங்குற்ற நரருக்கும் அப்பாக்கியம் கிடைக்கும்.



ஞாயிற்றுக்கிழமை இத்தீர்த்தக்கரையில் மாருதியின் முன் சூரியன் பிரசன்னமாயினன். ஆதலால் பானுவாரம் இதில் ஸ்நானம் செய்து அனுமானைத் தெரிசிப்பது மிகவும் நல்லது.

இராவணனைச் சங்கரித்த ஸ்ரீராமர் சீதையுடனும் தம்பியுடனும் புட்பக விமானமேறி அயோத்தி செல்லுகையில் இவ்வனும தீர்த்தத்தைக்கண்டு, ஆஞ்சநேயரால் பிரார்த்திக்கப்பட்டுக் கபிக்கூட்டத்துடன் இதில் தீர்த்தமாடி 'இத்தாமரைப் பொய்கை யாவராலும் கொண்டாடப்படுமாக' என்று அருளிச் சென்றார். அதிகாலை இதில் நீராடி ஆகாரம் கொள்ளாமல் மலைப் பிரதக்ஷணம் வந்தால் எல்லா காரியமும் கைகூடும்.

## * பாண்டவ தீர்த்தம்

அதன் வடக்கிலுள்ள சிகரத்தில் பாண்டவர்கள் தவம் புரிந்தனர். அங்கே உள்ள தீர்த்தத்திற்குப் 'பாண்டவ தீர்த்தம்' என்று பெயர். அதில் நீராடிக் கடுந்தவம் புரிந்த அர்ச்சுனன் சிவபிரானிடம் பாசுபதம் பெற்று, கண்ணபிரானையே சாரதியாய்க் கொண்டு துரியோதனுதிகளை வென்றான். இதில் ஸ்நானம் செய்தால் எக்காரியத்திலும் வெற்றி கிடைக்கும்.

மேலும், பாண்டவர்களுக்குப் பாட்டன் முறைமையானவனும், அத்திர கோத்திரத்தில் பிறந்தவனுமான 'புதன்' ஒரு நாள் நரசிங்கப்பெருமாள் சந்நிதியில் இருந்தபோது அங்கு வந்த தூர்வாச முனிவர் பெருமான் மேலிருந்து அர்ச்சகரால்

---

* பாண்டவதீர்த்தம் மலைமேல் இருப்பதாய்ப் புராணங் கூறுவதால், சின்னமலை அடிவாரத்தில் இருக்கும் தீர்த்தம் பாண்டவதீர்த்தம் அல்லவென்று ஊகிக்க இடமாகின்றது.

எடுத்துத்தரப்பட்டத் துளப மாலையைச் சிரமேலும், கண் மீதும், மெய்யெங்கும் வைத்துப் பக்தி பெருகத் துதித்துப் பாடி யாடி யதைக் கண்டு நகைத்தான். அதனால் கோபமுற்ற அம்மாமுனிவர் புதனை நோக்கிப் 'பக்தியின் பெருமை யறியாப் பாமரனே! நீ பூமியில் தங்கிச் சுவர்க்கம் புகாதிருப்பாயாக' எனச்சபித்தார்.

புதன் அஞ்சி நடுங்கி மன்னிக்கும்படி வேண்டினதால் மனமிரங்கிய தூர்வாசர், 'நீ பன்னிரு வருடம் பாண்டவ தீர்த்தத்தில் நாடோறும் நீராடி, இத் தேவனைச் சேவித்து, இவர் அணியும் திருத்துழாய்மாலை முதலியப் பிரசாதங்களை ஸ்வீகரித்து அம்மகிமையால் அப்புறம் சொர்க்கம் அடைந்து நவக்கிரகங்களில் ஒருவனாய் விளங்குவாயாக' என்றுரைத்தார். புதன் அப்படியே செய்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் தன் பதவியைப் பெற்றான். ஆதலால் இதில் புதன்கிழமை ஸ்நானம் செய்து நரசிங்கனைத் தெரிசிப்போர் பூரண பலன் பெறுவர்.

## சந்திர தீர்த்தம் அல்லது (சோமகுண்டம்)

பொன்மலைச் சிகரத்தில் கனிகளைத்தரும் பல தருக்கள் உள்ளன. ஆங்குள்ள 'அக்கி தீர்த்த'த்துக்கு மேற்கில் சுக்கிரன் தவம் புரிகிறான்; அதற்குத் தெற்கே அகத்திய ஆசிரமம் இருக்கிறது. அதன் மேற்கில் தூர்வாசர் தவம் செய்கிறார். அவ்விடம் நந்திக்கிராமம் என்னும் பதி உளது.

அங்கு 'சந்திர தீர்த்தம்' என்பதுண்டு. அதற்குக் கொஞ்ச தூரத்தில் 'தீவிரதபன்' என்னும் என் சகோதரன் வசிக்கும்



மகா காஞ்சி'* என்னும் நகரம் இருக்கிறது. நான் அங்கே சிலகாலம் சஞ்சரித்துக்கொண்டிருந்தேன். அப்போது அங்குற்ற சீதா சமேத ராம லக்ஷ்மணர்க்குப்பல திவ்வியாஸ்திரங்களை வழங்கி மந்திரோபதேசம் செய்தேன்.

## பத்ம ஸரோவரம்

அக்காஞ்சிமா நகரத்தில் 'பத்ம ஸரோவரம்' என்னும் அழகிய தீர்த்தமொன்றுண்டு. ஒரு காலத்தில் தத்தாத்திரேயர் சீடரான ஹேமாங்கதன், சித்திர ரதன், ஹேமகேசன், மகா ரதன், சுவேதகேது என்னும் ஐவர் சகல சாஸ்திரங்களையும் கற்று, பிரமனை வெல்லவேண்டும் என்னும் எண்ணமுடையவர்களாய் சத்தியலோகத்தை நாடிச் செல்லுகையில் இடையில் கண்ட எமபுரத்தில் உயிர்களை வாட்டிக்கொண்டிருந்த கிங்கரர் மேல் கோபங்கொண்டு பிரளயகால ருத்திரரோ வென்னச்சரங்களைப் பொழிய எமதூதர் எதிர் நின்று போராட வன்மை யற்றவராய்க் காலனிடம் தெரிவிக்க, எமதருமன் தன் காலதண்டத்தையே இவர்கள் மேல் ஏவிக்கொல்லத் துணிகையில், ஞான திருஷ்டியால் இவ்விபரீதங்களை அறிந்த தத்தாத்ரேயர் தமது சிஷியர்க்குண்டாக விருக்கும் ஈடில்லாக் கேட்டைத் தடுக்கவெண்ணி அந்தகனைச் சமாதானப்படுத்தி வரும்படி என்னை யனுப்பினார்.

---

* இவ்வூர் இக்காலத்தில் "பெருங்காஞ்சி" என்று சொல்லப்படுகிறது. இங்கு அகஸ்தியரால் பிரதிஷ்டையானதென்று சொல்லப்படும் ஒரு சிவாலயம் இருக்கிறது. இந்தத் தீர்த்தம் 'காஞ்சிமாநகரம்' பத்மஸரோவரமல்ல.

நான் சென்று எமனுடைய சினத்தைத்தணித்து அவ் ஐவரையும் மன்னிக்கச் செய்துச் சில மந்திரங்களை அவர்களுக்கு உபதேசித்து அனுப்பினேன். அன்னோர் என் தமையனை தீவிர தபன் ஆசிரமம் அடைந்துப் பத்மசரோவரத்தில் நீராடி நான் போதித்த மந்திரங்களை யுச்சரித்து கர்வ கோபங்களை விட்டுச் சத்வகுணசாலிகளாயினர். ஆதலால் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர்க்குக் கோபமும், அகம்பாவமும் நசித்து சாந்தம், விவேகம், பக்தி, ஞானம் முதலியன விருத்தியாகும்.

## வால்மீக தீர்த்தம்

பத்மசரோவரத்துக்கு மேற்றிசையில் நீண்ட காலம் தவம் செய்துப் பிரமதேவனைக்கண்ட வால்மீகரால் உண்டாகப்பட்ட 'வால்மீக தீர்த்தம்' இருக்கிறது. இவ்விடம் அவருடைய ஆசிரமமும் உண்டு.

## ராம தீர்த்தம்

நான்முகனும் நாமகளும் அங்கே வந்து புற்றினால் மூடப்பட்டிருந்த வால்மீகரை அதினின்றும் வெளிப்படக் கூறினர். அவர் அவ்வாறே வந்ததும், பிரமன் அவரை அன்புடன் வரவேற்று "நிகரில்லாத்தவ ச்ரேஷ்டா! நீ புற்றிலிருந்து வெளிப்பட்டமையால் நின் திருநாமம் 'வால்மீகர்' என்பதாகுக. உன்னால் அருளப்பட்ட 'மாணிஷாத' என்னும் சுலோகத்தைக்கேட்ட நாரதர் மனப்படி நீ இக்கிரியருகில் தவம்புரிந்து ஸ்ரீ நரசிங்கரைச் சந்தோஷிக்கச் செய்ததால், அத் திருமால் திருவுளப்படி உனக்கு அரிய வரங்கள் அருளிச் செல்ல வாணியுடன் நாம் இங்கே பிராப்தமாயினோம். ஸரஸ்



வதி உன் முகத்தை வாசஸ்தானமாகக் கொண்டதால் நீ தேஜஸுடன் விளங்கி, நாற் பால் குலத்துக்கும் ஆதாரவான இராமயண மகா காவியத்தை இயற்றி மூவலகும் புகழ் 'ஆதிகவி' எனப்படுவாயாக." என்று வரங்களீந்து 'ஸாரஸ்வதம்' என்னும் மந்திரத்தை வால்மீகருக்கு உபதேசத்துப்போனார். அதன் மகிமையால் வால்மீகர் ராமாயணமியற்றினார். அந்த இடத்தில் 'இராமதீர்த்தம்' என்பது இருக்கிறது.

## வஜ்ஜிர தீர்த்தம்

புத்திரப்பேறை யடையவேண்டி அத்திரி மகரிஷியும் அவர் பத்தினியான அநசூயையும் கடிகாசலத்தில் கடுந்தவமியற்றிவந்தனர். சிங்களத்தீவினனான அவுருவன் என்பான் இவ்வத்திரியால் அநுக்கிரகிப்பட்டால் தன் பிள்ளையில்லாப் பெருங்குறை நீங்குமென்பதைப் பகவன் ஆணையால் அறிந்துக் கடிகாசலம் அடைந்து வஜ்ஜிர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அத்திரியைக்கண்டு வணங்கி அவர் கிருபை பெற்று 'உக்ர தபன்' என்பவனைப் பெற்றான். அத்திரி தம் புத்திரியான சீலவதி யென்பாளை அவ்வுக்கிரதபனுக்கு மணஞ்செய்து கொடுத்தார். அதன்பின் உக்கிரதபன் தன்பத்தினியுடன் தாமிர பரணி நதிக்கரையில் வசிக்கலானான். அங்கே அவன் அன்னிய ஸ்திரீகளின் சேர்க்கைக் குட்பட்டு தன் குல தர்மத்தையும் தொழிலையும் அறவேவிட்டு தாசிகளின் ஆடல் பாடல் முதலிய லீலா விநோதங்களைக் கோலாகலமாய் அனுபவித்து வருகையில் அவனுடைய தேகத்தில் குஷ்டரோகம் கண்டு மெய் முழுதும் தழும்புகளும் புண்களும் உண்டாகி, அவற்றினின்றும் சீழும் உதிரமும் வெளிப்பட்டு புழுக்களும் உற்பத்தியாகி உதிர ஆரம்பிக்கவே உக்கிரதபன் கொண்டாட்டம் திண்டாட்டமாய்விட்டது. அப்போதும் அவனிடம் அருவருப்பா

வது கோபமாவது காட்டாமல் அன்போடு ஒழுகி அவனைப் பராமரித்துவந்த பதிவிருதா திலகமாகிய சீலவதி தன் பர்த்தாவின் பெரு வியாதிக்காகக் கடவுளை அல்லும் பகலும் தொழுது வருகையில் ஓர் நாள் அசரீரி அவளுக்குக் கேட்கும்படி பின் வருமாறு உரைத்தது.

'கற்பின் அணிகலனாய் விளங்கும் சீலவதி! உன் காரியம் கைகூடும்; உன் பதி பிணி நீங்கி க்ஷேமமடைவான்; ஆதலால் வருந்தாதே; அஞ்சாதே; சீக்கிரம் நல்மேனியுடன் விளங்கும் அவனைக்கூடிச் சுகிப்பாய். அதற்காக நான் சொல்வதுபோல் செய்வாயாக. இந்த இடத்திற்கு வடபால் அனுமத்கிரி முதலிய பர்வதங்களைக்கொண்டக் கடிகாசலப் பிரதேசம் இருக்கிறது; அங்கு உன் மாதா பிதாக்களும் தவம் புரிகின்றனர். அவ்விடம் நீ செல்வையேல் நின் குறை நீங்கும்' என்றதைக் கேட்ட சீலவதி பிரவிக்குருடனுக்குக்கண் வந்ததுபோல் சந்தோஷித்து, நடக்கவும் சக்தியற்றிருக்கும் தன் கணவனைத் தூக்கித்தன் இடுப்பில் வைத்துக் கடிகாசலத்தை நோக்கி நடக்கலுற்றாள். வழியிலே அம்மாதரசி பட்ட சிரமத்துக்கு அளவே இல்லை. வழி நரசிம்மர் சோதனையால் அதிக தூரமுடையதாய்ப் பெருகிவிட்டது. சீலவதி களைப்புற்று மூர்ச்சையாயினள். அது தெளிந்ததும் மீண்டும் நடந்தாள். இவ்வாறு செல்லுகையில் இருளாய்விட்டால் தன்னால் பயத்தைச் சகிக்கமுடியாதே யென்று அவள் எண்ணினாள். எவ்வாறாயினும் சூரியன் அஸ்தமிக்கு முன் கடிகையைச்சேர முடியுமோ என்று யோசித்தாள்; அது முடியாதெனவே அவள் புத்தியில் பட்டது. கடும்புலி வாழும் கானகத்தில காலனைப் போன்றக் காரிருள் சூழுமாயின் கணவனைச் சுமந்தேகும் காரிகையாகிய தான் எப்பாடு படநேரும் என்பதை எண்ணி எண்ணி அஞ்சித் தாமரை இலைமேல் தங்கிய நீர்த்துளி போல்தத்தளித்தாள்.



கடைசியில் அக்கற்பரசிக்கு ஓர் தீர்மானம் உதித்தது; உடனே அவள் அக்கினியை உண்டாக்கி அதன்மேல் ஆணையிட்டு சூரியனைப் பிரார்த்தித்து 'நான் பதிவிருதையேயானால்* இரவு வராதிருக்கக்கடவது' என்றாள். அதன்பின் ஆதித்தன் அப்போதிருந்த இடத்தைவிட்டு இம்மியளவும் நகராதவனாயினன். இதனால் காலக்கிரமங்கள் தடுமாறி அந்தணர் அருந்தவர் செயல்கள் தவறி மந்தாதி அரக்கர் தொந்தரவு உலகத்தில் அதிகமானது. ஆதலின் தேவர்கள் யாவரும் பிரம ருத்திராசகிதம் ஹேமசைலத்துக்கு மேற்கிலுள்ள அத்ரி யாசிரமம் அடைந்து அநசூயைக்கண்டு ஆகாயத்தில் நின்றபடியே 'அம்மே! உன் உத்தம புத்திரி சீலவதி தன் கணவனைத் தூக்கிக்கொண்டு இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருக்கிறாள்; அவள் சாபத்தில் சிக்கிய அருக்கன் அடி பெயராததால் காலக்கிரமங்கள் கெட்டு அசுரர் வலி அதிகரித்தது. ஆதலால் சீலவதியை யணுகி இரவு வரச்செய்யும்படி தயவு புரிவாய்' என்று வேண்டினர்.

அதைக் கேட்ட அத்திரி பத்தினி தன் புதல்வியை எதிர்கொண்டழைத்து வந்து 'கண்ணே! சீலவதீ! உன் சாபத்தால் மூன்று யாமங்கள் ஈனத்தை யடைந்தன. இத்தவறை உடனே போக்கு' என்ன, சீலவதி இரவு வர அனுமதி கொடுத்தாள். அவளுடைய அரிய மகத்துவத்தால் இராத்திரிப் போதில்லாத் தோஷம் விலகி சமஸ்தப்பிராணிகளும் சந்தோஷம் அடைந்தன. அமரர் அத்திரியை நோக்கி 'மூன்று மூர்த்திகளும்

* பகல் வரக்கூடாதென்று சாபமிட்டதாக ஒரு தமிழ் நூலின் அபிப்பிராயம்; இது நளாயினி கதைக்குமட்டுமே பொருந்தும்; இரவு வரக்கூடாதென்று சொன்னதாக பிர்மவைவர்த்தத்தின் பிரமாணம்.

உனக்குப் புத்திரராய் உதிப்பர் ; இங்கு ஏற்பட்ட வஜ்ஜிரதீர்த்த ஸ்நானத்தால் உன் மருமகனை உக்கிரதபன் பிணி நீங்கி வஜ்ஜிரம் போன்ற தேகமுடையவனாய் நின் மகளை மகிழ்விப்பான்.' என்று வரந்தந்தனர். அப்படியே விஷ்ணு அம்சத்தால் தத்தாத்திரேயரும், சிவாம்சத்தால் தூர்வாசரும், பிரமன் அம்சத் கொண்டு சந்திரனும் அத்திரிக்குப் புதல்வர்களாய் வஜ்ஜிரதீர்த்தக் கரையில் உற்பவித்தனர். உக்ரதபன் பத்னி சமேதனாய் அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நல் மேனி யடைந்தான். அதன்பின் அவன் சீலவதியைக் கண்ணெனக் காத்து அன்புடன் நடத்தினான்.

அதில் நீராடுவோர்க்குச் சந்தான விருத்தியும், தீர்க்காயுளும் உண்டாகும் ; சகல பிணிகளும் நீங்கும்.

## கல்ஹார தீர்த்தம் ; சிந்தாமணி மலை

ரவிகுல திலகனான ஸ்ரீராமன் ராவணனுடன் போர் செய்யும் தருணத்தில் அவர் பிரிவை ஆற்றாத பரதன் அதிகமாய் மனம் வருந்தினான். தன் தமையனுக்கு அசுரனால் என்ன ஆபத்து விளையுமோ என்று அஞ்சினான். அதனால் அவன் ராகவனுக்குத் துணையாகச் செல்ல வெண்ணிப் படையுடன் புறப்பட்டு வழியில் கடிகாசலப் பிரதேசத்தில் வஜ்ஜிர தீர்த்தத்திற்குக் கருகிலுள்ள பரத்துவாஜ ஆசிரமத்தில் தங்கி தன் பரிவாரங்களுடன் விருந்தளிக்கப்பட்டான். அப்போது அவன் ஆச்சரியமுற்றுப் பரத்வாஜரைப் பார்த்து 'முனிவரே வனத்தில் வாழும் தேவரீர் பெருஞ் சேனையோடு வந்த அடியேனுக்கு விருந்தளித்தது எந்த மகிமையாலென்பதை அறிய விரும்புகிறேன்' என்ன, அத்தவரிஷி "பரதா ! இதோ காண்கிற மலை



மேல் லக்ஷ்மீ நரசிம்மர் வளர்கிறார். அதற்கு வடபாலுள்ள நான் ஸதா அவரைத்தியானித்து அங்குள்ள 'கல் ஹார' தீர்த்தக்கரையில் தவம் புரிந்ததால் அளவிட முடியாத நன்மைகள் பெற்றேன். அந்த தீர்த்த ஸ்நானத்தாலும் அதன்கரையில் நரசிங்கரைக் குறித்துத் தவமியற்றுவதாலும் சாத்தியமாகாத காரியமே கிடையாது." என்று இயம்பி பரதன் நாடிச்செல்லுங் காரியம் தெரிந்து அவனை நோக்கி மீண்டும் கூறலானார்.

'தசரத புத்திரா ! நீ போராட லங்கைக்குச் செல்வது உசிதமல்ல ; உன் ராமண்ணா சீக்கிரம் சத்துரு சம்ஹாரம் செய்து சீதா லக்ஷ்மணருடன் அயோத்தி அடைவர். நானும் அகஸ்தியரும் தேவர்களுடன் போய் ராம ராவண யுத்தம் பார்த்திருந்து சற்றுமுன்தான் திரும்பி வந்தோம். இராமபிரான் விரைவில் வெற்றியுடன் திரும்புவார். ஆகையால், நீ அவருரையைத் தட்டாது இராஜ்ஜிய பரிபாலனம் செய்துகொண்டிரு.' என்று எடுத்துரைத்தார்.

பரதன் மனமகிழ்ந்து தன்னூருக்குத் திரும்பினான்; அவன் அப்போது "நரகரி யுறையும் இந்நன்மலை இன்றுமுதல் 'சிந்தாமணி' என்றும் பேருடன் விளங்குவதாக" என்று சொல்லிப் போனான். அதனால் அந்தகிரிக்கு சிந்தாமணி என்னும் திருநாமமும் உண்டு.

## தீர்க்கஸரோவரம்

அதன் எதிரில் தீர்க்க ஸரோவரம் என்னும் தீர்த்தம் இருக்கிறது ; அங்கு அமர தம்பதிகள் கூட்டங் கூட்டமாய்ச் சஞ்சரிப்பர். அதில் ஸ்நானம் செய்தால் ஆயுள் விருத்தி யடையும்.

நாசிங்கப் பெருமானுக்கு மார்கழி பங்குனி மாதங்களில் சப்தரிஷிகள் உற்சவங்கள் நடத்துவர். அந்நாயகனைப் பூசிப்பவர் வைகானஸ வம்சத்தவர்.

## வராக தீர்த்தம்

கௌதம தீர்த்தத்துக்கு வடபாகத்தில் பெரிய வனத்தில் ஜாம்பவந்தர் தபம் புரிகிறார்; ஜாம்பவதி என்னும் அவர் புத்திரி விஷ்ணுவைக் கணவனாய் அடையவேண்டி ஆகாரம் விட்டு அருந்தவம் புரிந்தாள்.

எட்டு வயதுள்ள அச்சிறுமிக்கு கந்த மூலந் தந்து களிப்பிக்க வெண்ணிய ஒரு பன்றி பூமியின் மேலே வளர்ந்துள்ள ஒரு கொடியின் கிழங்கைத் தோண்டி யெடுக்கத் தரையைக் கொம்பால் கொஞ்சங் கொஞ்சமாய்க் கில்லி வழி செய்கையில் குறிக்கிட்ட கற்பாறையையும் தன் கூரிய தந்தத்தால் உடைத்தெடுத்தபோது அவ்விடத்தில் ஓர் தீர்த்தம் ஏற்பட்டது. அவ்வாறு கஷ்டப்பட்டுக் கிழங்குகளைச் சேர்த்துக்கொண்டு ஜாம்பவதிக்கு அவற்றை யீந்த வராகத்தை நோக்கி அத்தவ நங்கை 'நீ யார்?' எனக் கேட்க, பூர்வ ஞானம்பெற்ற அப்பன்றி சொல்லலானது.

"ஏ! கடுந்தவம் புரியும் கன்னி! வராகத்துவஜ னென்னும் அரசனுக்கு சிங்கத்துவஜன் என்னும் பெயர்கொண்ட மூத்த மகன் உண்டு. அவன் வேட்டையாடுகையில் ஒரு பன்றியைத் துரத்த, அது 'தண்டு' என்னும் முனியிடம் சரண் புகுந்தது. சிங்கத்துவஜன் அங்கும் அதைத் தொடர அந்த ரிஷி கோபித்து அரசிளங்குமரனை நோக்கி 'நீ பன்றியாய்ப் போவாயாக' என்று சபித்தார். இந்தச் செய்தியை பரிவாரங்களால் தெரிந்த வராகத்துவஜன் விரைந்துவந்து தவசியை வணங்கித் தன் மகனை மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.



தண்டு முனிவர் மன்னனைப் பார்த்து "ஐயா! என் சாபம் அழியாதது; ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன், கேளும். பாலாற்றுக்கு வடக்கிலுள்ள நரசிம்ம க்ஷேத்திரத்திற்குப் போனால் உன் சுதன் பூர்வ நினைவு பெறுவன்; அவ்விடம் தவம் செய்யும் ஜாம்பவதிக்கு உபசாரம் புரியின் இவன் சாபம் நீங்கும்' என்றார். தாயே ஜாம்பவதீ! அந்த சிங்கத்துவஜனே நான்; இந்தத் தலமடைந்ததும் எனக்குப் பூர்வ ஞாபகம் உண்டாயிற்று; முனிவர் சொற்படி கந்த மூலங்கொடுத்து உன்னை உபசரிக்கலாயினேன். என் கொம்பு பட்டதால் உண்டான இந்தத் தீர்த்தம் 'வராக தீர்த்தம்' என்று பிறசித்தி பெறுவதாக! இதில் நீராடுவோர்க்கு எல்லாக் காரியங்களும் கை கூடும்" என்று விளம்பி மறைந்தது. இத்தீர்த்தத்திற்கு 'வராக தீர்த்தம்' 'வல்லி தீர்த்தம்' 'சிலாபுஷ்கரணி' என்னும் மூன்று பெயர்கள் உண்டு.

உடனே வராக ரூபத்துடன் திருமால் அவ்விடத்தில் தோன்றி "ஜாம்பவதீ! இந்தச் சிங்கத்துவஜனுக்கு சாப விமோசனமாக்கவும் உன் முன் பிரத்தியக்ஷமாகவும் நாம் இவ்வுருவத்துடன் எழுந்தருளினோம்; நாம் உன்னைக் கிருஷ்ணவதாரத்தில் மணம்புரிந்து மகிழ்வோம். நாம் சதா இந்த வராகதீர்த்தக் கரையில் இருப்போம்." என்று திருவாய் மலர்ந்தருளிச் சென்றார்.

## * புண்டரீக (வியாக்கிர) தீர்த்தம்

இந்த மலைக்குத் தெற்கே கச்சபர் தவம் செய்து வந்தார். அவருடைய மனைவியான தரும விருதை என்பாள் பதி பக்தி மிகுந்தவளாய்ப் பணியாற்றிவந்தனள். அந்த உத்தமி ஓர் நாள் தன் நாயகனுக்கு அளிக்க நற்கனிகள் கொண்டுவர வேண்டி அங்குள்ள காட்டில் சென்று ஓர் விளாமரத்தின் கீழ் உதிர்ந்திருந்த விளாங்கனிகளை எடுக்கலானாள். அப்போது அங்கே வந்த ஒரு புலி அம்மாதைப் பார்த்துத் தனக்கு ஒரு பழம் கொடுக்கும்படி கேட்டது. தரும விருதை தன் பர்த்தா உண்ட பின்பு தருவதாயும் அருகிலுள்ள புண்டரீக தீர்த்தக் கரையில் தான் தாங்கள் இருப்பதாயும், அங்குசென்று தன் நாயகனுக்குக். கனி கொடுக்கும் வரையில் பொறுத்திருந்தால் பழத்தை யடையலாமெனவுங் கூறினள்.

புண்டரீக தீர்த்தம் என்னும் வார்த்தையைக் கேட்டவுடனே அப்புலிக்குப் பூர்வ ஞானம் வந்து விட்டது. அது தருமவிருதையைப் பணிந்து "தாயே! உன்னால் நான் புனிதமானேன்; என் வரலாறும், அவ்வாவிக்குப் புண்டரீக தீர்த்தம் என்னும் பெயர் வந்த காரணமும் சொல்லுகிறேன், கேள்.

கருமதைக் கரையிலுள்ள நகரமொன்றில் தருமவிரதன் என்னும் அந்தணன் இருந்தான்; அவன் சகல சாஸ்திர சம்பன்னனாயிருந்தும் சகவாச தோஷத்தால் தர்க்கம் பேசுவதில் ருசியுள்ளவனானான். ஒரு நாள் அவன் வியாச முனியிடம் போய்ச் சில குதர்க்கமான கேள்விகளைக் கேட்டதால், அம்மக

* இந்த தீர்த்தத்திற்கு அருகில் 'புலிவலம்' என்னும் ஊர் இருக்கிறது.



ரிஷி கோபித்து 'நீ தர்க்கம் பேச இச்சை கொண்டாயாதலால் நீயும் உன் சதியும் புலிகளாய்ப் போவீராக" என்று சபித்தார். அப்போது தருமவிரதன் வணங்கிக் கெஞ்சி மன்னிக்கும்படி வேண்ட வியாசமுனிவர் இரங்கி 'நீங்கள் புலி யுருவங்களுடன் பல வனங்கள் திரிந்து முடிவில் கடிகாசலம் சேர்ந்து அங்குள்ள ஒரு தீர்த்தத்தில் நீர் பருகப்போய் தவறி விழுந்து சாபம் நீங்கி நரசிங்கன் கிருபையால் வைஷ்ணவ பக்தராவீர்களாக' என்றார். உடனே அத்தம்பதிகள் புலிகளாயினர்.

இஃது இப்படியிருக்க, கந்தர்வ நகரத்தில் சித்திர ரதன் என்னும் ராஜனுக்கு வில்வலன், வங்கன், மணிகண்டன், மணித்விஜன், சித்ரபானு, சித்ரமணி, சித்ரகேது, மாணிபத்ரன், மகாரதன், சுவேதகேது, ரஸ்மிகேது, ரத்னகேது, துசுரன், லவங்கன் என்னும் பதினான்கு புத்திரர் இருந்தனர். ஒருநாள் நாரதர் அவர்களுக்கு வீணை கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தபோது சித்திரரதன் தமையனான களகண்டன் என்னும் பேருடைய நான் அங்கிருந்தேன். அகங்காரத்தால் நான் நாரதரை நோக்கி அபசுவரமாய்ச் சுருதி கூட்டுவதாய் உரைத்ததால் அம்மகாமுனி கோபமுற்று நீ தர்க்கம் பேசியதால் சதி சகிதம் ஆண்புலி பெண்புலி உருவங் கொண்டு கடிகாசலத்தினருகிலிருக்கும் தம்பதிகள் வயிற்றில் புலியாகப்பிறந்து, தருமவிருதை என்பாளை விளாங்கனி கேட்டு அவள் கற்பின் மகிமையால் புண்டரீக தீர்த்தம் என்னும் மொழி செவியுற்றமாத்திரத்தில் பூர்வ நினைவுண்டாகி மீண்டும் நின் பதி யடைவாயாக என்றார்.

அவ்வாறே கடிகாசல மடைந்த அப்புலிகள் வயிற்றில் நான் பிறந்தபின், முன் சாபப்படி அவ்விருவரும் தீர்த்தத்தில் விழுந்து விஷ்ணு லோகம் சென்றனர். அதுமுதல் அந்தத் தீர்த்தத்திற்கு புண்டரீக (வியாக்கிர) தீர்த்தம் என்றும் பெயர்

உண்டானது. புண்ணியவதியே இன்று உன்னால் என் சாபமும் விலகியது ; உனக்கு அனந்தகோடி வந்தனங்கள்.' என்று கூறிக் களகண்டன் புலி யுரு மாறி திவ்விய கந்தர்வனாய் விமான மேறித்தன் நகர் சேர்ந்தான். தருமவிருதை இங்குற்ற யாவும் கச்சிபர்க் குரைத்துச் சந்தோஷித்தாள்.

இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் பூர்வஞானம் உண்டாகிக் கன்மம் விலகும். இங்கு தேவ பிதுர்தர்ப்பணம் செய்தால் சந்தான விர்த்தியும் தீர்க்காயுசும் உண்டாகும். இவ்விடத்தில் பெரிய ஆலமரம் ஒன்றுண்டு.

அதற்குத்தெற்கே கல் ஆலமரம் ஒன்று அதிக தூரம் பாவியிருக்கிறது. அதன் ஜல்லிகளில் அநேக ரிஷிகள் தவம் புரிகின்றனர்.

## கருட தீர்த்தம்

அங்கே கருட தீர்த்தம் என்பது இருக்கிறது. கிரி பிரதக்ஷிணம் வருவோர் இதிலும் ஸ்நானம் செய்யவேண்டும். அதன் மேற்கில் தருமசுரதனென்னும் ரிஷி யாசிரம முண்டு. அது முனிவரும் அந்தணரும் அக்நி ஹோத்திரம், சந்தர்ப்பணை முதலியன செய்யுமிடம். அதற்கு வட திசையில் ரோகிணி சகிதமாய்ச் சந்திரன் தவம் புரிகிறான் ; அவனுக்குக் கவுச்சிகன் என்னும் சிஷ்யன் உண்டு. அச்சீடன் தான் வளர்க்கும் ஒரு மானுடன் குருவுக்கும் குரு பத்தினிக்கும் காய்கனி கொண்டு வர சென்றான்.

## பாபநாசன தீர்த்தம்

அவன் கனிகளைக் கொய்தபின் பாபநாசன தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஜபம் பண்ணிக் கொண்டிருந்த போது



அந்தமான் அம்மலையோரம் சென்று சிகரத்தைப் பார்த்துக் காஜித்துச் சிங்கமாய் மாறியது. இதற்கு முன்பே அதன் கண்ணில் பட்ட ஒரு பெண் சிங்கம் அக்கிரியிலிருந்து வந்ததும், இரண்டும் கூடிக்களித்தன ; உடனே அவை அரக்கரூபங்களோடு ஆனந்த முற்றன. அப்போது ஒரு விமானந்தோன்றியதும் அநேக வைஷ்ணவ பக்தர்கள் அதினின்றும் இறங்கினர். கொஞ்ச நேரத்தில் யாவும் மாயமாயின.

எல்லாங்கண்ட கவுச்சிகன் வியந்துத் தன் குருவான சந்திரனிடம் போய் யாவு முரைத்தான். சந்திரன் அந்த வரலாற்றைக் கூறலானான்.

சீடா ! நாகரியை ஆராதித்து வந்த வைகானஸ குல அர்ச்சகர் ஒருவருக்குப் புதல்வனாய்ப் பிறந்த ஹரிதத்தன் என்பவன் தூர்வாசரிடம் கலை பயின்று குருதக்ஷிணை கொடாத காரணத்தால் அரக்கனாய் மாறித் தன் கண்ணில் காணும் பெண் விலங்கைச் சந்தோஷப் படுத்தும் ஆண் உருவைப் பெற்று காம ரூபியாய் அலையும்படி அத் தூர்வாஸரால் சாபமுற்றான். அவன் தன் குருவைப்பணிந்து மறுசாபம் பெற்ற விதிப்படியே நமது ஆசிரமத்தில் மானாய் வளர்ந்து நற் சங்கசகவாசம்பெற்றமையாலும் நரகேசரி யருளாலும் நித்திய சூரிகளால் விஷ்ணு லோகத்திற்கு வரவேற்கப்பட்டான். பாபநாசனத்தில் நீராடியதால் அம்மா புருஷர் யாவரையும் காணும் பாக்கியம் உனக்குக் கிடைத்தது ' என்றான்.

ஆதலால் பாபநாசன தீர்த்த ஸ்நானத்தால் பாவம் விலகிப் பரிசுத்தமனமும், பரம பாகவதர் சேவையும் கிடைக்கும்.

## அமிர்த தீர்த்தம்

அதற்கருகில் ‘ஸுவேஷணம்’ என்னும் வனமிருக்கிறது. அங்கே தொங்கும் விழுதை ஆதாரவாகக்கொண்டு ‘ஜபாலி’ தவம் புரிகிறார். அவர் நீண்ட காலமாய் அங்குத் தவமியற்றுவதால் அந்த வனத்திற்குத் ‘தீர்க்காராமம்’ என்னும் காரணப் பெயரும் உண்டாயிருக்கிறது. அங்கே பல மூலிகைகள் உண்டு. அவை ஆண்டவன் அனுக்கிரகத்தால் மாந்தரின் பிணிகளைப் போக்கி ஆயுள் வீரியம் முதலியன விர்த்தியடையச்செய்யும் மகிமையைப் பெற்றுள்ளன. அவ்விடத்தில் அமிர்தமயமான நீரைக்கொண்ட ‘அமிர்த குண்டம்’ என்னும் தீர்த்தம் இருக்கிறது. அதன் கரையில் வைகானசரும் பராசரும் வசித்து நிர்மலசித்தராய் .விளங்குகின்றனர். அத்தீர்த்த ஸ்நானத்தால் மானிடரும் தேவருக் கொப்பாவார்கள்.

## வாம தீர்த்தம்

அதற்கு வடக்கிலுள்ள கிரியில் தத்தாத்திரேயர் தவம் செய்கிறார். அந்தமலைக்கு இடப்பக்கத்தில் ‘வாம தீர்த்தம்’ இருக்கிறது. அதில் தத்தாத்ரேயர் ஸ்நான பானம் செய்வார்.

## இரத்தின தீர்த்தம்

பூர்வம் தேவருக்கும் அசுரருக்கும் பெரிய யுத்தம் ஆரம்பித்தது; அரக்கர் அமரர் பொருளையெல்லாம் கவர எண்ணங் கொண்டனர். சுரர் இதைத் தெரிந்துத் தம்மிடமுள்ள வசு (சிந்தாமணி) முதலிய தன முற்றிலும் அக்கினி தேவனிடம் கொடுத்து வைத்தனர். அதையும் அறிந்த ராக்கதர் அப்பொருளை அபகரிக்கத் தீர்மானித்து அக்நியை துரத்தலானார்கள்.



அக்கினி தெற்குமுகமாய் ஓடுகையில் அவரிடமிருந்த தனம் கீழே தவறி விழுந்துவிட்டதால் அசுரர் அவரைப் பிடித்துச் சோதித்துப் பார்த்து அவரிடம் ஒன்றும் இல்லை யென்றறிந்து வாளா திரும்பினர். உடனே அரக்கருக்கும் அமரருக்கும் பலத்த யுத்தம் நடந்தது. அதில் தேவரே ஜயித்தனர். அதன்பின் அவர்கள் அக்கினியிடம் வந்து தனத்தைக் கேட்கவே தீயரசன் நடந்ததை விளம்பிப் பொருளெல்லாம் தம்மை யறியாமலே கொட்டுண்டு போனதற்காக மிகவும் வருந்தினார். உடனே அனைவருமாக அத்தனத்தைத் தேடலாயினர். அப்படி அவர்கள் வியாகூலத்துடன் தேடி வருகையில் வழியில் தத்தாத்திரேயரைக் கண்டு அவரை வணங்கித் தமக்கு நேர்ந்துள்ள கஷ்டத்தை இயம்பி விசனித்தனர்.

தத்தாத்திரேயர் அவர்களை நோக்கி ‘அமரர்காள்! அக்கினி பயத்துடன் ஓடுகையில் அந்தத்தனம் இந்தச் சிந்தாமணிச் சிகரத்துக்கு வடக்கிலுள்ள பர்வதத்தில் விழுந்துவிட்டது. அதைக்கண்ட நான் ‘நிகும்பன்’ என்னும் பூதாகாரனை அங்கே இதற்காகக் காவல் வைத்திருக்கிறேன். நீங்கள் அவ்விடம் போய் என் உத்தரவை அவனுக்குச்சொல்லித் தனத்தை அடையுங்கள்” என்று அருளினார். தேவர் அகமகிழ்ந்து அம்மலைக்குப் போய் அங்குள்ள ‘இரத்தின தீர்த்த’த்தில் நீராடி நிகும்பனால் தனத்தைப் பெற்று “இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர்க்கு ஐசுவரியம் உண்டாவதாக” என்று அருளிச் சென்றனர். அதற்குத் ‘தேவ தீர்த்தம்’ ‘தத்தாத்திரேய தீர்த்தம்’ என்னும் பெயர்களும் உண்டு.

## சரயு அல்லது வசிட்ட தீர்த்தம்

(அனுமார் மலையில் ஸ்ரீராமர் எழுந்தருளக்காரணம்)

அதற்குத்தெற்குப் பக்கத்தில் ‘வசிட்டர்’ தவம் புரிகிறார். முன்னம் இராமபிரான் சீதாபிராட்டியுடனும் தம்பியுடனும்

அங்கே யெழுந்தருளி ஜானகியின் வாக்கியத்தால் ‘ சரயு ’ நதியை அவ்விடத்திற்கு வரவழைத்தார்; பின்னர் அவர் வசிட்டரை நோக்கி “ எங்கள் குல குருவே! எனது சரித்திரத்தைத் தேவ பாஷையில் சொல்வீராக. நாங்கள் அனுமத்கிரியில் தங்கி அதனைக் கேட்டு மகிழ்வோம் ” என்று கூறி மாருதி தவம் புரியும் குன்றில் தங்கி வசிட்டர் வாக்கைக் கேட்கலானார்.

சீதையால் வரவழைக்கப்பட்ட அந்தச் சரயு நதிக்கு ‘ வசிட்ட தீர்த்தம் ’ என்னும் பெயரும் உண்டு; அதில் நீராட விஷ்ணுலோகம் பிராப்தமாகும்.

ஆதலால் வாமதேவா! நீ கிரியை மகாப் பிரதக்ஷிணம் செய்து அனும தீர்த்தத்தில் நீராடி ஆஞ்சநேயனை உபாசித்து அமிர்தம் பெறுவாயாக. பலசாலியான அனுமான் பக்தரால் துதிக்கப்பட்டு வரந்தருவதில் நிகரில்லாதவர். அவர் அஞ்சனை வயிற்றிலிருந்து உதித்தவுடனே சூரியனைக் கண்டு அவரைக் கனி யென்றெண்ணி பறிக்கப் பாய்ந்து அந்தப் பானுவால் ஆதரிக்கப்பட்டு நவவியாகரணமும் ஐயம் திரிபு அறக் கற்றவர்; பின்பொரு நாள் சந்திரன்மேற் பாய்ந்து அமிர்தத்தை அம்மதியால் பெற்றவர். ஆனால் அந்த அமிர்தம் இவரிடமில்லை. அதைச் சோமனிடமே கொடுத்து தாம் வேண்டும்போது அளிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார். ஆகையால் அவ்வமிர்தத்தை உனக்கு உதவுவார். நீ சென்று அவரைச் சந்தோஷிக்கச் செய்வாய் ” என்று அருளினார்.

அவ்வாறே வாமதேவர் மலையை வலம் வந்து அனும தீர்த்தத்தில் நீராடி ஒரு மாதம் தவம் செய்தார். தாம் தங்குவதற்காக மலைக்கு வடதிசையில் ஒரு பர்னசாலையும் செய்து கொண்டார். அவர் மாசி மதி பௌர்ணமி ஞாயிற்றுக்கிழமை கூடிய நன்னாளில் அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கிழக்கு



முகமாய்த்திரும்பி நின்று மேற்கு முகமாய் வீற்றுள்ள அனுமானைத் துதிக்கலானார்.

## ஆஞ்சநேயர் தோத்திரம்

**(சுத்தப்ரம்ம பராத்பரராம் என்ற சந்தம்)**

உம்பர் பணிந்திடும் அனுமானே
ஒன்பதி லக்கண முணர்ந்தோனே
வெம்பரி திப்புறம் புகுந்தோனே
வீரமுங் கீர்த்தியு மிகுந்தோனே
நம்ப, சுக்ரீவனைக் காத்தோனே
ராகவ னுற்றுயர் தீர்த்தோனே
அம்மையைத் தேடியே சென்றோனே
அரக்கிலங் கிணிதனைக் கொன்றோனே
அந்தவ சோகினில் நின்றோனே
அன்னையைக் கண்டிருள் வென்றோனே
செம்மையாய் மால்புகழ் படித்தோனே
சீதையின் சோகத்தைக் கெடுத்தோனே
சம்மதக் கணையாழி கொடுத்தோனே
தகும்விசுவ ரூபத்தை யெடுத்தோனே
அன்பாய்ச் சூடாமணி பெற்றோனே
அசுரன்றன் வனத்தினி லுற்றோனே
பஞ்சராக் கதரையு மழித்தோனே
பதர்ஜம்பு மாலியை மடித்தோனே
இந்திரசயித்தன் முன் நடித்தோனே
இராவணன் பேரவை யடுத்தோனே
சுந்தரவால் கோட்டை யெடுத்தோனே
சூரன்முன் பலமதி தொடுத்தோனே
தந்திர வாலில்தீ பிடித்தோனே

சடுதியில் நகர்சுட்டு முடித்தோனே
விந்தையா யலைகடல் கடந்தோனே
மேகசி யாமனை யடைந்தோனே
செந்திரு வணியவர்க் களித்தோனே
சிரஞ்சீவி யெனுவரந் தரித்தோனே
இம்மியில் கடலணை விரித்தோனே
இலங்கைய சுரர்பல முறித்தோனே
முன்சென்று பரதனைப் பார்த்தோனே
மூர்த்திப்பின் வருமுறை சேர்த்தோனே
மன்னவன் முடிசூட மகிழ்ந்தோனே
மங்கள மாலைபெற் றணிந்தோனே
இன்பமா யதில்ராம மறிந்தோனே
ஏமசை லேசனே அனுமானே.

இவ்வாறு புகழ்ந்து துதித்த வாமதேவர் முன் அனுமார் பிரசன்னமாகி "புத்தி மிக்கப் பூசுரனே! உனது ஸ்தோத்திரத்தால் மிக மகிழ்ந்தோம்; நீ கேட்கும் வரம் யாதாயினும் அளிப்போம்" என்ன, வாமதேவர் தம் மிரு கரங்களையுஞ் சிரமேற்கூப்பி ஆஞ்சநேயரை வணங்கி "ஸ்ரீராம தூதரே! நான் 'மகாதபர்' என்னும் என் தந்தையிடம் சகல கலையும் படித்தேன்; கல்வி முடிந்தபின் அவரை நோக்கி 'குருதக்ஷிணையாது வேண்டும்?' என்றேன். அவர் தாம் எதையும் விரும்பவில்லை என்றும் நான் கூறியே தீரவேண்டும் என்னும் பிடிவாதங் கொண்டதால் அவர் என்னைப் பார்த்து தம்முடைய பிதுர் சிரார்த்தத்திற்காக அமிர்தம் கொண்டுவந்து உதவும்படி கட்டளையிட்டார். நான் அதனைப்பெற உலகெங்கும் அலைந்தும் பயன் படாமற்போனதால் முடிவில் அகஸ்தியனரா யடைந்து, அவரால் தேவரீர் மகிமையறிந்து இங்குற்றேன். ஆதலால் அமிர்தத்தைக் கொடுத்து என்னைச் சிறப்பிக்கக் கோருகிறேன்" என்றார்.



மாருதி "அவ்வாறே தருகிறோம்" என்றருளிச் சந்திரனை யழைத்து அவனிடம் கொடுத்து வைத்திருந்த அமிர்தத்தை வாமதேவருக்கு அளிக்கச் செய்தார். அதைப் பெற்ற வாமதேவர் தம்மிடம் அடைந்து தந்தையிடம் அமுதைக் கொடுத்து நடந்த யாவுங்கூறி புகழ்பெற்றார். இந்த ஸ்துதியைப் படனம் செய்பவர்க்கு மாருதி கைகண்ட பலன் தருவார் என்பதில் சந்தேகமேயில்லை. அனுமதீர்த்தத்தில் மாசிமாதப் பௌர்ணமியிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஸ்நானம்செய்து அனுமாரைச் சேவித்தால் எல்லாகாரியமும் எளிதில் கைகூடும்.*

## விசுவாமித்திரர்

இவ்வாறு சூரியன் சொல்லக்கேட்ட விசுவாமித்திரர் இமயமலையைவிட்டுக் கடிகாசலமடைந்து அங்கே அகத்தியர், வசிஷ்டர், வால்மீகர் முதலியோரைத் தெரிசித்து, மலையை மும்முறை வலம் வந்து, பைரவ பிரம தீர்த்தங்களில் நீராடிச் சுக்கிரவாரம் இலக்குமி தீர்த்தத்தில் சுமங்கலிகளைப் பூசித்து அத்தீர்த்தத்

* புராணங்களிற் பெரும்பான்மை, அனுமார் சூரியனைக் கனி என்றெண்ணிப் பாய்ந்ததாகவும், அவன் தூண்டுகோலால் இந்திரன் வஜ்ஜிராயுதம் வீச, அதனால் மூர்ச்சித்தபோது வாயு கோபித்து ஆகாயத்தைப் பந்தித்ததாயும், அப்போது தேவரும், மூவருங்கூடி அனுமாரை வாழ்த்தி எண்ணிலா வரங்கள் ஈந்து வாயுவைச் சமாதானப்படுத்தியதாகவும், வேறு ஒருசமயம் சந்திரனால் மாருதிக்கு அமிர்தங்கிடைத்ததாயும் கூறுகின்றன. ஆனால் கடிகாசல மகாத்மியத்தைக்கொண்ட பிரம கைவர்த்த புராணம், அனுமார் முதலிற் பாய்ந்தது சந்திரன் மேலென்றும், அப்போதே முற்கூறியபடி நேர்ந்து அமிர்தம் கிடைத்ததென்றும் தெரிவிக்கிறது.

திற்கு தென்பாகம் ஓர் ஆசிரமம் உண்டாக்கிக் கடுந்தவம் செய்ய வாரம்பித்தார். அப்போது அவர் உடல் முழுதும் கொடியால் மூடப்பெற்றது. இந்த உக்கிரமான தபசைக்கண்ட இந்திரன் விசுவாமித்திரரைத் தவத்தினின்றும் வெளியேற்றக் கருதி அவ்வனத்திலிருந்த பழங்கள் நிறைந்த ஐந்து இலந்தை மரங்களைக் கன்னிகளாக்கி கோசிகன் தவத்தைக் கெடுத்துவரும்படி யனுப்பினான். அவர்கள் அவ்வாறே விசுவாமித்திரரை யணுகியபோது பரிமள வாடையால் அவர்கள் கருத்தை யுணர்ந்த விசுவாமித்திரர் சினந்து "கன்னியராய் விளங்கும் இலந்தை மரங்களே! முன்னம் விஷ்ணுமித்திரன் என்னும் பரம தரித்திரன் தன் வறுமை நீங்கும் வகைத் தேவராஜனால் அறிந்து இக்கடிகையை யடைந்து உங்கள் கனிகளைத் தின்றதால் ஐசுவரியஃ பெற்றான்; இத்தகைய பெருமைகள் பலவடைந்த நீங்கள் இன்று இந்திரன் போதனைக்குட்பட்டு என்னை மயக்க வந்ததால் இன்றுமுதல் நீங்கள் காயா மரங்களாய்ப் போவீராக" என்று சாபமிட்டார். அன்று முதற்கொண்டு அவை கனியில்லா விருக்ஷங்களாய்ப் பசுமை கொண்டிருக்கின்றன.

அதன் பின்னும் புலத்திரன் பல வின்னல் புரிந்தானாயினும் விசுவாமித்திரர் தம் தவ நெறியினின்றும் பிசகினாரில்லை. அதனால் இந்திரன் தேவ கணங்களுடன் அங்கு வந்து 'விசுவாமித்திரரே! மெச்சினேன்; மெச்சினேன். உமது தவ வலியைச் சோதித்ததற்காகக் கோபியாமல் (வம்சவல்லி) கொடியைவிட்டு வெளியில் வாரும்; உமக்காக வேண்டியதைச் செய்யக் காத்திருக்கிறேன்' என்றான். கோசிகர் கண் விழித்து விண்ணரசனுக்கு ஆசனங்கொடுத்து உபசரித்து 'இந்திரா! ஆதித்தன் அருளியபடி நான் இவ்விடத்தில் பிரம்மண்ணியம் பெறத் தவம் புரிந்தேன்; அப்பதவியை வசிட்டர் வாக்



கால் எனக்கருளச் செய்தல் வேண்டும்.' என்ன தேவர்க்கரசன் 'அப்படியே செய்கிறேன்' என்று வசிட்டாசிரமம் போய்க் கோசிகருக்குப் பிராமணத்துவம் தரும்படி வேண்ட, வசிட்டர் நரசிங்கர் உத்தரவளித்தால் தாம் வாக்கருளத் தடையில்லையென்று கூறியதால் அவ்விருவரும் யோகநாயகன் சந்நிதானத்தை நோக்கி நடக்கலாயினர்.

வழியில் விசுவாமித்திரர் ஆசிரமத்துக்கு அருகே வருகையில் அவர்கள் ஒரு விஷ்ணு பக்தனைக் கண்டனர்; அதே சமயம் அவன் கழுத்தில் ஒரு மாலை விழுந்தது; உடனே அவன் தங்கப்பல்லக்கில் ஏற்றப்பட்டுக் ககனமார்க்கமாய்க் கொண்டு போகப்பட்டான். இந்த சம்பவத்தைப் பார்த்து அதிசயித்த வசிட்டருக்கு இந்திரன் சொல்லலானான்.

"முனி சிரேஷ்டரே! இவன் பிங்களன் என்னும் வணிகன். புத்திரனில்லாமையால் வருந்திய இவன், தனக்கும் தன் தந்தையான கனவங்கன் என்பானுக்கும் குருவும், இந் நரசிம்மமூர்த்தி அர்ச்சகருமான வைகானசகுல வாதந்து முனிவரிடம் சென்று தன் குறை நிவர்த்தியாகும் உபாயம் கூறும்படி வேண்ட, அம் மகரிஷி கோபால மந்திரத்தை உபதேசித்து அதைச் செபித்து பிரம தீர்த்தத்தில் நீராடிக் கிரி வலம்வந்து சிங்கப்பிரானைச் சேவித்தால் புத்திரனுண்டாவான் என்றார். இவன் அவ்வாறே செய்து நாடோறும் நரசிங்காருகில் வீணை கானம்செய்து வந்தான்.

பெருமாளுக்குச் சத்தியவிரதனால் சாத்தப்படும் வனமாலை தினமும் சிங்கன் சங்கற்பப்படி இவ்வீணைக்குச் சூட்டப்படுவதுண்டு; அது தவறி பிங்களன் கழுத்தில் விழும்போது அவன் விஷ்ணுலோகமடைவான் என்று தேவவாக்கு. அதன்படி இன்று நடந்ததால் அவன் வைஷ்ணவ பக்தரால் அழைத்துச்

செல்லப்பட்டான். மேற்கூறியபடி மாலையை மாலுக்குச் சாத்தும் சத்தியவிரதன் என்பான் புனித நீராடி கிரி வலம் வந்து வியர்வை சிந்த மலை ஏறுகையில் நான் இரங்கி விசிறியால் அவனுக்கு விசிறினேன்; அதனால் என் போக பாக்கியங்களும் நரகரி கடாக்ஷமும் அதிகரித்தன.

அர்ச்சகரான வரதந்து முனிவர் பிங்களனுக்குக் கூறிய மற்றொரு விருத்தாந்த முண்டு, அதாவது :

புண்ணிய புர அரசனான சத்துருஜயன் என்பவன் மக்களில்லாததால் மனம் நொந்து காசிபரிடம் போய் முறையிட்டான். அவர் சொன்னபடியே அவன் கடிகாசலம் வலம் வந்து பெருமானைச் சேவித்துத் தான தருமம் செய்துப் புத்திர காமேஷ்டி யாகம் இயற்றிப் புதல்வனைப் பெற்றார்" என்று இயம்பினான்.

அதன்பின் தேவேந்திரன் வசிட்டருடன் விசுவாமித்திரரையும் சிங்கப்பெருமான் சந்நிதிக்கு அழைத்துப் போனான். அங்கே வசிட்டர் இந்திரன் விருப்பத்தை யுரைத்து இறைவனைத்துதித்து அவர் பதிலை எதிர்பார்த்து நின்றார். அப்போது நரசிங்கன் ‘ஏ! வசிஷ்டா! கடுந்தவம் புரிந்த விக்கோசிகனுக்கு நின் கனிவாயால் பிராமணத்துவம் தருவாயாக’ என்று திருவாய் மருந்தருளினார். உடனே வசிட்டர் அனைவருக்கும் கேட்கும்படி உரத்த குரலில் ‘விசுவாமித்திரர் பிரம்மரிஷி’ யென்று கூறினார். அதனால் அந்த விசுவாமித்திரர் இச் சுவேத வராக கல்பத்தில் சப்த ரிஷிகளில் சிரேஷ்டராய் விளங்குகின்றார்.

## திருமணம்; லக்ஷ்மீ தீர்த்தம்

கடிகாசல சிகரங்களில் பதினான்கு முக்கியமானவை. அக்டிகையின் வடபாகத்தில் பெருமை பொருந்திய திவ்விய தீர்த்த



மொன்றுண்டு. அதில் ஆயிரம் இதழ்களால் அலங்கரிக்கப்பட்ட செந்தாமரை மலர்மேல் லோகமாதாவான மகாலக்ஷ்மி கன்னிகா வடிவுடன் அவதரித்து, அங்குள்ள அழகிய சோலையில் பொன்னூஞ்சலமைத்து, தேவமாதர் புடைசூழவும், காதணியின் ஒளியால் கதிரோன் நாணவும், முகத்தமையும் அழகால் மதியும் வெட்கமுறவும், காலணி சிலம்பொலி காதம் நீளவும், கஜமிரண்டு துதிக்கையில்கொண்ட அமிர்த கும்போதகத்தால் நீராட்டவும், துந்துபி முழங்கவும், சுரர் மலர்மாரி பெய்யவும் அதிலமர்ந்து ஊஞ்சலாடி யிருந்தார்.

இரண்யனைக் கொன்ற எம்பெருமான் கருடனேறிக் ககன மார்க்கமாய் வருகையில் கன்னியாய் விளங்கும் தம் ஆருயிர் நாயகியைக் கண்டு மோகங்கொண்டுக் கீழிறங்கித் திருமகள் கரங்களில் பிடித்திருந்த கமலங்களைப்பற்றி இழுத்துக்கொண்டார். அச்செய்கையை உணர்ந்த இலக்குமி மேலே பார்த்து நாதன் வருகையை யுணர்ந்து நாணித் தலை குனிந்து புன்னகைதவழும் வதனத்துடன் விளங்கினார். நாராயணன் அப்பூமகளைத் தம் அழகிய கரத்தால் எடுத்து மடிமீதிட்டு அங்கு ஓர் நவமணிகசிதமான சிங்காதானத் தமர்ந்து மணம் புரிந்தார். அப்போது அங்கே ஆனந்த பக்தியுடன் கைகூப்பி நின்றிருந்தத் தேவேந்திரனைக் கண்டு மகா விஷ்ணு “இந்திரா! முன்னொருகால் நீ காமதேனு கற்பகத்தரு முதலிய செல்வம் யாவும் இழந்தபோது பாற்கடலில் உற்பவித்து உனக்கு இழந்த நிதியும் பதியும் தந்து என்னைத் திருமணம் புரிந்த மகாலக்ஷ்மியே இவள். இந்நங்கை புனர் ஜனனம் இச்சித்து மீண்டும் இப்பொய்கையில் தாமரை மலரில் உற்பவித்து என் வருகையை எதிர் பார்த்துத் தவமிருந்தாள். இவள் பிரிவை ஆற்றாது வருந்திய நான் பக்ஷிராஜன்மேல் ஆரோகணித்து ஜம்புத்வீபமெல்லாம் தேடி வருகையில் ஹேமசைலத் தருகிலுள்ள

ஜிப்புனலில் இக்கன்னியைக் கண்டு களிப்புண்டேன். 'அமிர் தேசுவரி' என்னும் அழகிய நாமம்பூண்ட இவ்வம்புஜாக்ஷி தன்னைத் துதிக்கும் நரருக்கும் சுரருக்கும் விரைந்து அருள்புரிவள்" என்றதைக் கேட்டத் தேவராஜன் திருமகளை வணங்கித் துதிக்கலானான்.

## திருமகடுதி

(சுத்தப்ரம்ம பராத்பர ராம் என்ற சந்தம்.)

அமிர்தேஸ் வரியே மாதிருவே
ஆனந்த வுருவே மாதிருவே
இமையார் போற்று மாதிருவே
ஈநிதி பதியம் மாதிருவே
உமைநா தன்சோ தரிதிருவே
ஊழ்வினை நீக்கும் மாதிருவே
எமையன் றாண்ட எழிற்றிருவே
ஏழ்மைப் போக்குந் தாய்த்திருவே
ஐமங் களமுங் கொடுதிருவே
ஒருமையா யடியார் துதித்திருவே
ஓதிடு நான்மறை புகடிருவே
ஔவையே கடிகா சலத்திருவே.

இந்தத் தோத்திரத்தால் அதிகமும் மகிழ்ந்த அமிர்தவல்லி அங்குற்ற யாவரையும் தமது கடைக்கண் ணோக்கத்தால் பாலித்து அவர்க்கு அஷ்ட ஐசுவரியமும் உண்டாக அருளினார். திருமால் இந்திரனைப் பார்த்து "அமராதிபா! உன்னால் துதிக்கப்பட்ட இதனால் இந்நங்கையைத் தொழுவார்க்குக் குறைவற்ற செல்வம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. இவ் வசந்தகாலத்தில் இம்மணத்தைக் கொண்டாடுவோர்க்கும் சுக்



கிரவாரந்தோறும் இத்தீர்த்தத்தில் நீராடி இலக்ஷ்மியை உத்தேசித்து சுமங்கலிகளுக்கு அணியாடை முதலிய தானம் வழங்குவார்க்கும் அந்நாட்களில் இவ்விடத்தில் வாசஞ்செய்யும் எம்மிருவரால் ஆயுள், ஆரோக்கியம், சத்புத்திர சந்தானம், தன தானியம், கீர்த்தி முதலியன உண்டாகும்." என்று திருவாய் மலர்ந்தருளினார்.

## நரசிம்ம தீர்த்தம்

இங்ஙனம் வசிஷ்ட மகரிஷியால் சொல்லக்கேட்ட இந்திரத்யும்னன் தேவர்க்கும் கிடைத்தற்கரிதான ஸ்ரீ நரசிம்ம கவசத்தை அம்முனிவரால் உபதேசிக்கப்பெற்று, அங்குள்ள தீர்த்தங்களில் சதி சகிதம் நீராடி வசிட்டருடன் மலையேறி மேல் பாகத்தை யடைந்தான். அவ்விடம் அவன் முனிவரை நோக்கித் தவ சிரேஷ்டா! இந்த ஸ்தானத்தின் விபரம் யாது? என்ன, வசிட்டர் கூறலானார். இந்திரத்யும்னா! இது வாமதேவர் முதலிய ரிஷிகள் வேதம் கற்ற விடம். இங்கே வாமதேவாசிரமம் உண்டு. இந்த மலையின் கீழ்ப்பக்கம் ஸ்ரீ நரசிம்மரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் ஒன்றுண்டு. அதன் திருநாமம் 'நரசிம்ம தீர்த்தம்' என்பது. பரமசிவன் உமையுடன் அதில் நீராடிப் பிரமஹத்தி தோஷம் நீங்கப்பெற்றான். அதன் கரையில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட விருக்ஷங்கள் பலஉள. அவற்றின் மகிமையும் அளவற்றது.

பூர்வம் 'சததருமன்' என்னும் பிராமணன் ஒருவன் இருந்தான்; அவனுக்கு விஷ்ணுதத்தன் என்னும் பெயருள்ள மகன் உண்டு. சததருமன் தன் மனைவியையும் மகனையும் பாராதவனாய் யவனர் (Greeks) நாட்டில் அடிக்கடி தங்கி அவ்வன்னியர் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி மது மாமிசமுண்டு குல ஹீனன் ஆயினான்.

அவன் மரித்த பின்னர், விஷ்ணுதத்தன் அவனை நரகத்தினின்றும் விடுவிக்க எண்ணிப் ‘புருகுத்சர்’ என்னும் முனிவரைக் கண்டு மார்க்கங் கேட்க, அவர் கயாவுக்குப்போய் மாண்டவன் அஸ்திகளைக் கங்கையில் சேர்த்து அவ்விடத்திலே சிரார்த்தம் செய்தால் நரகப்பிராப்தி விலகுமென்று கூற, அதன்படி விஷ்ணுதத்தன் தன் பத்தினியுடன் கயாவை நோக்கி நடக்கலுற்றான். அப்போது ஆகாயத்திலிருந்து பின் வருமாறு அவன் செவியிற்பட்டது.

“விஷ்ணுதத்தா! உன் தந்தைக்கு நற்பதவி கிடைக்க வேண்டுமானால் கயாவைவிட இருமடங்கு அதிக மகத்துவம் பெற்ற கடிகாசலம் சென்று மலைக்கு அடிப்பாகத்தில் உள்ள நரசிம்ம தீர்த்தக் கரையில் உன் பிதாவுக்குச் சிரார்த்தம் செய்வாயாக. அந்தத் தீர்த்தம் நரகரியின் பெருவிரலால் உண்டாக்கப்பட்டதாகும். பாகீரதி அதில் பிரவேசித்திருக்கிறாள். ஹேம கோடி விமானத்திலிருந்து சுற்றும் யோசனை தூரம் வரையில் கடிகாசல க்ஷேத்திரம் எனப்படும்.

ஒரு காலத்தில் கடிகையையும் கயாவையும் துலாக்கோலிலிட்டு நிறுத்திப் பார்த்தபோது கடிகாசலமே எடையில் கொஞ்சம் மிகுந்தது. ஆதலால் நீ அங்கே செல்வாய்” என்றதைக் கேட்ட விஷ்ணுதத்தன் அவ்வாக்கை நரசிம்மர் திருவாணையே என்றெண்ணிக் கடிகாசலம் சேர்ந்து நரசிம்மதீர்த்தக் கரையில் சிரார்த்தம் செய்தபோது பிதுர் தேவதைகள் பிரத்யக்ஷமாகி ‘என்ன வரம்வேண்டும்?’ என்று கேட்க, அவ்வேதியன் தன் தந்தையை நரகிலிருந்து மீட்கும்படி வேண்டினான்.

அத்தேவதைகள் ‘உத்தமா! நீ கடிகாசலம் அடைந்தபோதே உன் தந்தை விஷ்ணுலோகம் சேர்ந்தான். உனக்குத் தீர்க்காயுள், புத்திரப்பேறு, விஷ்ணுவிடம் நீங்காப்பக்தி முதலியன உண்டாவதாக’ என்று வரமருளிச் சென்றார். இந்தத் தீர்த்த ஸ்நானத்தாலும், இக்ஷேத்திரத்தில் பிதுர் தர்ப்பணம், சிரார்த்தம் முதலியன செய்வதாலும், பக்தி, ஐசுவரியம், ஆயுள் முதலியவை விருத்தியடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



## ஸ்ரீ நரசிம்ம ஸ்தோத்திரம்

இந்த விஷ்ணுதத்தன் வம்சத்தில் உதித்த விப்ரசேகரன் என்பவன் தன் முன்னோர் குலநெறி தவறி துன்மார்க்கங்களில் பிரவேசித்துப் பிரஷ்டர்களாய் மாண்டதை யறிந்து அவர்களை நற்கதி யடைவிக்க வெண்ணிக் கடிகாசலம் அடைந்து சிங்கப்பெருமான் திருப்பணியாற்றி, பக்த கோஷ்டிகளுக் குதவி புரிந்து நரகேசரியை * நூற்றிருபத்துநான்கு நாமங்களால் தோத்தரித்துத் தன் மூதாதைகளைக் கரையேற்றினான்.

முன்பு, இரணியனால் வெறுக்கப்பட்டப் பிரகலாதன் கடலில் தள்ளப்பட்டபோது நரகரியே இதனைப் பிரகலாதனுக்கு உபதேசித்தார்; இதைத் தோத்தரித்ததால் அவன் கரையேறிப் போய்த் தன் தந்தையைப் பணிந்து நின்றான்.

அகலிகை விஷயமாகக் கௌதமரால் சாபமுற்ற இந்திரன் தேவசபைக்குப் போக நாணி மானஸ ஸரோவரத்திலுள்ள ஆயிரம் இதழுடைய தாமரையின் நாளத்தில் மறைந்திருந்தான். பிரமன் இதை யறிந்து அவனிடம் போய் இந்தத் துதியை அவனுக்கு உபதேசித்தார். இத்தோத்திரம் படனம் செய்ததால் இந்திரன் நல்ல தேகமடைந்து தன்னிடம் சேர்ந்தான். ஆதலால், நரசிம்மனை ஸேவித்து ஸ்துதிப் பார்க்கு சகல காரிய சித்தியாகும்.”

---

* இந்நாமங்களே இக்ஷேத்திரத்தில் இந்நாளும் அநுசரிக்கப்பட்டுவரும் நரசிம்மாஷ்டோத்தரம்.

என்று விளம்பிய வசிஷ்டர் அந்த ஸ்தோத்திரத்தை இந்திரத்தியும்நனுக்கு உபதேசித்தார். அதன்பின் அவர்கள் கிரியின் உச்சிக்கு அருகே செல்லுகையில் இந்திரத்தியும்நன் "ரிஷிகள் தலைவரே! இந்த மலைக்கு இரண்டாவதாய் விளங்கும் அழகு பொருந்தியதும் என் மனசுக்குச் சந்துஷ்டிதருவதுமாகிய இவ்வுன்னதச் சிகரத்தின் வரலாறு யாது?" என வினவ, வசிஷ்டர் "அரசர் திலகமே! ஹேம கோடிக்குச் சமமுடையதாய் உயர்ந்திருக்கும் இந்தச் சிகரத்தின் * மேல் பிரகலாதன் நெடுங்காலம் தவம்புரிந்து துருவனைப் போன்று நிலையான பதவியைப் பெற்றான்.

## சங்க சக்கர தீர்த்தங்கள்

இச் சிருங்கத்திற்குத் தெற்கில் சக்கரதீர்த்தமும், மேற்கில் சங்கதீர்த்தமும் கடிகாசலத்தின் கண்கள்போல் பிரகாசிக்கின்றன. அந்தத் தீர்த்தங்களில் நீளமான நாளங்களுடைய தாமரைகளின்மேல் பக்ஷிகள் நிறைந்தும், சல சரங்கள் சஞ்சரித்தும் எப்போதும் அழகுபடுத்தும். அவற்றின் நீர் சத்ஜனங்களின் மனம்போன்று நிர்மலமாய் உள்ளது. அக்கரைகளில் சூரியனை மறைக்கும்படி ஓங்கி வளர்ந்துள்ள விருக்ஷங்கள் உண்டு.

சங்க சக்கர தீர்த்தங்களுக்கு இடையே, பிரமன், ருத்திரன், விஷ்ணு, சந்திரன், குபேரன், சூரியன் முதலானோர் ஸ்ரீ மஹா லக்ஷ்மியை உபாசித்து ஸ்ரீ ஸூக்தத்தை ஜெபித்து அத்திருமகளால் அநேக வரங்கள் பெற்றனர்.

---

* தற்காலம் இதைப் பொஜ்ஜை குண்டு எனச் சொல்கின்றனர்.



குபேரனுக்கு அருள்புரிய கரங்களிலேந்திய கமலங்களுடன் வல்லியின் கீழ்ப் பிரசன்னமானதால் 'அமிர்தவல்லி' என்னும் திருநாமத்தோடு விளங்கும் மகா லக்ஷ்மி இச் சங்க தீர்த்தக் கரையில் சதா வசிக்கலாயினள். இத் தீர்த்தத்தில் சங்குகள் உற்பத்தியாவதால் இதற்குச் 'சங்கதீர்த்தம்' என்னும் பெயர் உண்டானது.

இந்தத் தீர்த்தத்திற்கு அக்னி மூலையில் சக்கர தீர்த்தம் இருக்கிறது; அங்கே அவுத்தாலிகர் என்னும் ரிஷி தவம் செய்து வந்தார். அவர், நரசிங்கரால் சங்குசக்கரம் அடையப் பெற்று அவ்வழியாய்ச் சென்ற அனுமாரைப் பார்த்து வணங்கி * நூற்றெட்டு நாமங்களால் அம்மாருதியைத் தோத்தரித்தார்.

ஆஞ்சநேயர் மகிழ்ந்து அவுத்தாலிகரை நோக்கி என்ன வரம் வேண்டுமென்ன, அவர் வாயுசுதனைப் பணிந்து "நாற்கர நாயகா! தங்கள் சுதர்சனத்தை இத்தீர்த்தத்தில் ஆழ்த்திச் செல்வதுடன், விஷ்ணுவிடம் நீங்காத பக்தியும் எனக்கருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அனுமார் தமது சக்கரத்தால் அத்தீர்த்தத்தைப் பரிசுத்தமாக்கி அவுத்தாலிகர் கருத்தை ஈடேற்றிச் சென்றார். சுதர்சனம் அதில் ஆழ்த்தப்பெற்றதால் இதற்குச் சக்கர தீர்த்தம் என்னும் பேர் ஏற்பட்டது."

என்று வசிஷ்டர் வாக்கால் கேட்கப் பெற்ற இந்திரத்தியும்நன் அந்தத் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து மலையுச்சியைச் சேர்ந்தபோது மலையின் அடிவரையில் மாலைபோல் விளங்கும் பொன் வண்ணக் கொடியைக் கண்டு அதிசயிக்க முனிபுங்கவர் அதைப்பற்றியும் புகல்வார்.

---

* இங்கு வழங்கும் அனுமார் அஷ்டோத்தரம் இதுதான்.

## ஹம்ஸக்கொடி ; அம்ஸ தீர்த்தம்

" ராஜனே ! சத்திய லோகத்திலிருந்து தன் அலகில் கௌவிய பொற்றாமரை நாளத்தை நான்முகனுக்குச் சமர்ப்பிக்க அவரிருந்த சுவேத த்வீபத்தை நாடிச் சென்று கொண்டிருந்த ஓர் அன்னப் பறவை ககன மார்க்கமாய் இக்கடிகாசலத்தின் மேலே வரும்போது அந்தக் கொடியானது அதன் அலகினின்றும் தவறி இப் பர்வதத்தின் மேலே விழுந்துவிட்டது. அதனால் வருந்திய அன்னம் அந் நாளத்தைத் தன்னால் ஆனமட்டும் தூக்கிப்பார்த்து அது வேரூன்றி யிருக்கக் கண்டு நரசிங்கரிடம்போய் பலவாறு துதித்து பிரமாவுக்காக அக்கொடியைத் தான் கொண்டுபோகும்படி அருள்செய்ய வேண்டுமென்ன, நாராயணன் அன்புடன் அதனை நோக்கி ' ஓ அன்னமே ! இப் பொற்றாமரைக் கொடி கிரியின்மேல் ஆரம்போல் விழுந்து எனக்கு அழகு படுத்துகிறது. ஆதலால், இதனைத்தவிர வேறு வரம் கேள்' என்றார். அன்னம் சந்தோஷித்து 'ஜெகத்காரணா ! இந்தக் கொடி * யைப் பக்தியாய்த் தெரிசிப்பார்க்குச் சந்தானமும் தீர்க்காயுளும் அளித்துக் காக்கவேண்டும் ' என்று பிரார்த்தித்தது.

தேவதேவன் அவ்வாறே அருளி ' அன்னமே ! நீ அயனுக்கு வாகனமாகி அரும் புகழ் பெறுவாய் ' என்று வாழ்த்தினார். அதன்பின் அவரிடம் விடைபெற்ற அன்னம் ஸ்வேதத்வீபம் சென்றது.

---

* மலையிலிருந்து மாலைபோல் தரைவரையில் வந்துள்ள இக்கொடியை பர்வதத்தின் கீழே நின்றாவது, அனுமத்கிரியிலிருந்தாவது இன்றும் காணலாம்.



இந்தக் கொடி, யுகபேதத்தால் வர்ணபேத மடைந்து காணும் ; இங்குள்ள தீர்த்தத்திற்கு ' ஹம்ஸ ' தீர்த்தம் என்று பெயர். அதில் நீராடி இக்கொடியையும் சேவிப்பார்க்கு எல்லா காரியங்களும் அநுகூலமாகும் " என்றார்.

## ஹேமகோடி விமானம்

இந்திரத்தியும்நன் அதில் ஸ்நானம் செய்து, அதற்குத் தென்புறமுள்ள ஹேமகோடியைக் கண்டான்.

சிங்கபுயங்களால் சுமக்கப்பட்டதாயும், பிரணவாத்மிகமாயும், அநேக ரிஷிகளால் சேவிக்கப்பட்டதாயும், பூத, பிசாச, பிரம்ம ராக்ஷஸங்கள் அணுக அஞ்சுவதாயும், துர்ஜனர்க்குக் காணக் கிடைக்காததாயும், திக்குபாலகரால் சூழப்பட்டதாயும், பிர்ம்ம ருத்திரரால் போற்றப் படுவதாயும், வைகானஸ பூஜைக்குரியதாயும், சித்த வித்தியாதரரால் தொழப் பெற்றவராயுள்ள நரசிம்மன் என்கிற நிகரிலா மணியையுடைய பெட்டகம் என்னத்தக்கதாயும் உள்ள அந்த ஹேம கோடியைத் தெரிசித்த வேந்தன் உரோமம் சிலிர்க்க, உள்ளம் உருக, ஆனந்தக் கண்ணீர் அருவிபோல் பெருகி அங்கமுழுதும் நனைக்கச் சிரமேற் கரங் கூப்பித் திருமகள் நாயகனைத் துதிக்கலாயினன்.

## ஸ்ரீ நரசிம்மர் துதி

(சுத்தப்ரம்ம பராத்பர ராம் என்ற சந்தம்)

மாமறை யாக்கிய நரசிம்மா
மலரய னுக்கீந்த நரசிம்மா
சோமுக னைக்கொன்ற நரசிம்மா
சுருதிக டுதிமச்ச நரசிம்மா
ஆமையா யுதித்தஸ்ரீ நரசிம்மா
அரியகி ரியெடுத்த நரசிம்மா
பூமியின் முறைகேட்ட நரசிம்மா

முனிந்த வராகனே நரசிம்மா
ஏமசை லேசனே நரசிம்மா
இரண்யாநு ஜனைக்கொன்ற நரசிம்மா
பூமன்ப்ரக் லாதன்தொழும் நரசிம்மா
பொங்கித்தூ ணிலே வந்த நரசிம்மா
சோமப்ப ரிதிக்கண்ணு நரசிம்மா
சூரன் உடல் கிழித்த நரசிம்மா
ஓமக்ஷா க்கர நரசிம்மா
ஓங்கியு லகளந்த நரசிம்மா
மாமதி வாமன நரசிம்மா
பலியைப்பா தலம்சேர்த்த நரசிம்மா
ராமஸ்ரீ ராமனே நரசிம்மா
ராவண னையழித்த நரசிம்மா
காமனை யீன்றஸ்ரீ நரசிம்மா
கண்ணனே கார்வண்ண நரசிம்மா
நேமனும் பௌத்தனே நரசிம்மா
நிகரிலாக் கல்கியே நரசிம்மா
தீமைய கற்றுவாய் நரசிம்மா
திருமகன் மார்பனே நரசிம்மா

## மங்களகரம்

இம்மாதிரி பலவாறாகத் தோத்தரிக்க, ஸ்ரீ அமிர்தவல்லி நாயகரான நரசிம்மமூர்த்தி பிரசன்னமாகித் தம் கடாக்ஷவீக்ஷண்ணியத்தை இந்திரத்யும்நன்மேற் செலுத்திப் பின்னர் வசிட்டரை நோக்கி "தவசிகள் தலைவரே! நெடுங்காலம் நம்மை பக்தியுடன் நினைத்து வந்ததால் இவ்வரசன் பிராமணன் ஆதற்கு அருகதை யடைந்திருக்கிறான்; ஆதலின், உமது மாண்பு மிகுந்த மலர் மொழிகளால் இவனை மறையவன் ஆக்



கும்" என்றதும், வசிஷ்டர் நரபதியைப் பார்த்து "இந்திரத்யும்நா! மகா யோகிகளுக்கும் சுலபத்தில் கிடைக்க முடியாத நரகரியின் அநுக்கிரகத்தை நீ பெற்றாய்; ஆதலால் நீ பிராமணன் ஆனாய்" என்று கிருபை பாலித்தார். இந்திரத்யும்நன் உடனே பிரம்மரிஷியாய் தேஜசுடன் விளங்கினன். பின்னர், அவனும் அவனது பத்தினியும் தமக்காக வந்தவிமானத்திலேறி சாலோக்கியம் அடைந்தனர்.

## புராண சிரவண பலன்

இந்த அருமையான கடிகாசல மகாத்மியத்தை வாசிப்பதாலும், பிறர் படிக்கக் கேட்பதனாலும், எழுதுவதாலும், புத்தகத்தைப் பூசிப்பதனாலும் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியின் கருணையெனும் பிரசாதம் பிராப்தமாகி சர்வ மங்களங்களும் நிறைந்து இகபர சாதனங்கள் கிடைக்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

## ஸ்ரீ நரசிம்மர் அவதார காலம்

ஸ்வாயம்புவ மன்வந்தரம் கிருதயுகம் மூன்றாம் பாதம் * வைசாக சுக்கில பௌர்ணமி வெள்ளிக்கிழமை திருவோண நக்ஷத்திரத்தோடு கூடிய பிராதஸ்ஸந்தியில் ஸ்ரீ நரசிம்மர் கடிகாசலத்தில் யோகபாவமாய் எழுந்தருளி வாமதேவாதி ரிஷிகளுக்குக் கணப்போதில் முக்தியளித்தார். நொடியிலே அருள் புரியும் வன்மையால் 'கடிகாசலம்' என்னும் காரணப் பெயர் வாய்ந்த அந்தத் திவ்விய க்ஷேத்திரத்தில் ஆவிர்பவித்த அழகிய சிங்கனை வைகானஸ குலத்தவர் ஆராதித்து வருகின்றனர். என்று பிரமதேவர் சொல்லி சனகாதி ரிஷிகளை மகிழ்வித்தார்.

சுபம்!!

97430

* சைத்திர மென்றும் ஒரு பிரமாணம் உண்டு.

# AN APPEAL.

At Sri Kanchi (Conjeevaram) one of the seven great holy shrines of India, the accomodation for pilgrims, thousands of whom flock during the annual Brahmotsavam festival, is very poor.

There is a site (85, East Rajah Street, Big Conjeevaram) near the Railway station which has been dedicated by the owners for the fifth day festival and God Varadaraja alights there on that day in Mobini Guise. It is proposed to erect a *Mantapam* for Sree Varadaraja at the site and also a *Dharmasala* for the benefit of the pilgrims.

The undersigned (a member of the family which dedicated the site) appeals to the generous-hearted public to contribute their mite for the construction.

Remittances may be sent to the Secretary, Urban Bank Ltd., Little Conjeevaram.

MADRAS, 1—5—34. (Sd.) S. NARASINGA RAO.